*கவனிக்க.- 24.03.2017 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (I), பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2013 - 2017 මාර්තු මස 31 වැනි සිකුරාදා - 2017.03.31

*2013 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 552 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 571 |


**கவனிக்க.**- (i) இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம் சட்டமூலம் 2017, மாச்சு மாதம் 10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) இலங்கை கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2017, மாச்சு மாதம் 17 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி.வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2017, ஏப்பிறல் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, ஏப்பிறல் மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிகளில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

***2. சேவை நிபந்தனைகள் : பொது***

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.*

***3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :***

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

***4. பணிக்கமர்த்தும் நியதிகள் :***

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

***6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :***

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

***7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :***

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கைப் பொலிஸ்

### பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவி

இலங்கை பொலிஸ் சேவையில் பயிலுநர் பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவி ஆட்சேர்ப்புக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுநர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, 1 ஆம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடிதத்தின் இடது பக்க மேல் மூலையில் தங்களால் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2017.05.02 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பிவைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் இலங்கைப் பொலிஸினால் விண்ணப்பங்கள் வழங்கப்பட மாட்டாது.*

*3. **சம்பள அளவுத்திட்டம்.**- ரூபா 3,54,480 - 7 ×3,600 - 27 X 4,440 - ரூபா 4,99,560.*

*2016.01.01 ஆந் திகதி முதல் 2020.01.01 ஆந் திகதிவரை சம்பளம் பொது நிர்வாக சுற்றுநிருபம் இலக்கம் 3-2016 இன் அட்டவணை II இன் பிரகாரம் வழங்கப்படும். மேலும் 2020.01.01 முதல் முழுமையான சம்பள அளவுத் திட்டம் மேற்குறிப்பிட்டவாறு அமையும்.*

மேலும், இவ்வுத்தியோகத்தர்கள் 2013.01.07 ஆந் திகதிய பொலிஸ் மா அதிபர் சுற்றுநிருப இலக்கம் 2416/2013 இன் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளுக்கு உரித்துடையவர்களாவர். மேற்குறிப்பிடப்பட்ட சம்பளத்திற்கு மேலதிகமாக கீழ்வரும் கொடுப்பனவுகளை மாதந்தோறும் பெறுவதற்கும் உரித்துடையவராவர் :-

(அ) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு : 7,800 ரூபா ;

(ஆ) பொ. நி. சு. இல. 03/ 2016 இற்கு அமைய அடிப்படைச் சம்பளத்தில் 40% கொடுப்பனவாகக் குறிப்பிடப்பட்ட பதவிக்கு வழங்கப்படும் : 5,712 ரூபா

(இ) கடினக் கொடுப்பனவு : 2,000 ரூபா

(ஈ) சீருடைகளைச் சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு 250 ரூபா ;

(உ) இணைந்த கொடுப்பனவுகள் : 10,500 ரூபா (350 X 30 விசேட கொடுப்பனவுகள் வழங்கும் பிரதேசங்கள்) ;

(ஊ) இணைந்த கொடுப்பனவுகள் : 8,400 ரூபா (350 X 24 விசேட கொடுப்பனவுகள் வழங்காத பிரதேசங்கள்) ;

இந்த கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக :

(அ) இலவச போக்குவரத்து வசதிகள் ;

(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளிநாடாக இருப்பினும் வைத்திய வசதிகள் பொருட்டு பண உதவிகள் வழங்கப்படும்) ;

(இ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;

(ஈ) விளையாட்டுத் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கான வசதிகள் வழங்கப்படும் ;

(உ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகளுடன், கடினமான வேலைகளுக்காகவும் அத்துடன் திறமையாக கடமைகளைச் செய்வதற்காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும் ;

**4. தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

(அ) ***வயதெல்லை.***- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18-28 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) ***கல்வித் தகைமைகள்.***- க.பொ.த. (சா. தர) பரீட்சையில் கணிதம்/ தாய்மொழி உட்பட இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரண்டு தடவைகள் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரர்கள் முதலாவது தடவையில் ஒரே முறையில் 5 பாடங்களில் கணிதம்/ தாய்மொழி இரண்டு பாடங்களில் அல்லது ஒரு பாடத்திலேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

**குறிப்பு 1.**- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பாட வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையை வகைப்படுத்தும்போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும்.

**குறிப்பு 2.**- க.பொ. த. (சா. தர) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாதவராகக் கருதப்படும்.

**குறிப்பு 3.**- விருப்பத்திற்குரிய தமிழ்/ ஆங்கிலம்/ சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடத்திட்டத்திற்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாக கருதப்பட மாட்டாது.

(இ) ***பௌதிகத் தகைமைகள் :***

* ***உயரம்*** : 5 அடி 2 அங்குலம் (ஆகக் குறைந்தது)

**குறிப்பு 1**.- சிறந்த விளையாட்டுத் திறமையுடன் தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் உடல் தகுதி தேவைப்பாடுகள் சற்று குறைவாக இருப்பினும் அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் ஆலோசனைப்படி தகைமை பெறுவர்.

(ஈ) ***பார்வை தொடர்பான தேவை***.- ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 இற்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவும் மற்ற கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பினும் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமை அற்றவராவார்.

(உ) ***பிற தகைமைகள்***.- விண்ணப்பதாரர் திருமண மாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்து பெற்றவர்கள் தகுதியற்றவர்களாகக் கருதப்படுவர்).

5. ***ஆட்சேர்ப்பு முறை***.- விண்ணப்பங்களின்படி தகைமையைப் பெறும் விண்ணப்பதாரிகள் இலங்கைப் பொலிஸினால் நடாத்தப்படும் அடிப்படைத் தகைமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். அதில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் பின்வரும் உடற்தகுதிப் பரீட்சையில் பங்குபற்றி அதிலும் சித்தியெய்துதல் வேண்டும்.-

* உடற்தகுதிப் பரீட்சை :

1000 மீற்றர் ஓட்டம் - 05 நிமிடம் 14 வினாடி

* உடற் தகுதிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர் :

(i) இவ் எழுத்துப் பரீட்சை இரு வினாத்தாள்களை உள்ளடக்கியது. அவை :

* 45 நிமிடங்களில் 500 சொற்களுக்குக் குறையாமல் ஒரு விடயம் தொடர்பாக கட்டுரை எழுதுதல்.

* பொது அறிவும் நுண்ணறிவுப் பரீட்சைக் காலம் (1 மணித்தியாலம்)

6. **மருத்துவப் பரிசோதனை :**

* விண்ணப்பதாரர் தனது நியமனத்தைப் பெற முன்னர் மருத்துவ பரிசோதனையில் சித்தியடைய வேண்டும். மருத்துவ பரிசோதனையானது ஆட்சேர்ப்பு செயற்பாட்டில் ஒரு அங்கம் மட்டுமே ஆகும். மருத்துவ பரிசோதனையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் தற்போது உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை, முன்னுரிமை மற்றும் அவர்களது திறமை அடிப்படையில் அமைந்த பட்டியலின்படி தெரிவுசெய்யப்படுவர். மருத்துவ பரிசோதனையில் சித்திபெறாதோர் நிராகரிக்கப்படுவர்.

7. **பின்னணி விசாரணைகள்**.- (அ) விண்ணப்பதாரியின் நன்நடத்தையும் அவரின் நெருங்கிய உறவினர்கள், நண்பர்களின் நன்நடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். பின்னணி விசாரணைகளில் ஏதேனும் பாதகமான காரணிகள் இருந்தால் அவ்விண்ணப்ப தாரர்கள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரர் பொய்யான தகவல்கள் வழங்குவது அல்லது மூடி மறைப்பது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவார்.

8. ***அரச கரும மொழிக் கொள்கையை அமுல் படுத்துதல்*** :

- பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 07/ 2007ஆம் இலக்க 2007.04.28 ஆந் திகதிய சுற்று நிருபத்தின் பிரகாரம், 2007.01.01 ஆந் திகதியிலிருந்து அரச சேவைக்கு/ மாகாண அரச சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களுக்கு தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச கரும மொழிகளிலும் சேவையில் சேர்ந்த திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் தேர்ச்சி பெறல் வேண்டும்.
- 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்படும் அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் மொழிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.
- நியமனத் திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் இரண்டாம் அரச கரும மொழியில் சித்தியடையாத வர்கள் குறித்த மொழியில் தேர்ச்சி அடையும் வரை சம்பள ஏற்றங்கள் நிறுத்தி வைக்கப்படும்.

9. **நியமன நியதிகள்**.- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உட்பட்டதுமாகும். விதவைகள்/ தபுதாரர்/ அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செலுத்துதல் வேண்டும்.

10. **சேவை நிபந்தனைகள்**.- (அ) நியமனம் 3 ஆண்டு கால தகுதிகாண் அடிப்படையில் இருக்கும்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அரச கரும மொழிக் கொள்கைக்கு இணங்க ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபனக் கோவையின் I ஆம், II ஆம் தொகுதிகளில் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகள், நிதி ஒழுங்கு விதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்பட்டவர்கள் ஆவார்கள்.

(ஈ) பதவி நிரந்தரமாவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தரும் விதிக்கப்பட்ட திணைக்களப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். விதிக்கப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்கள்.

(உ) நியமனம் பெற்ற உத்தியோகத்தர்கள் பொலிஸ் மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் நிரந்தரமாக்கும் வரை திருமணம் செய்ய அனுமதிக்கப் பட மாட்டார்கள். எனினும் 1973.02.28 ஆந் திகதிய 41 ஆம் இலக்க பொலிஸ் வர்த்தமானி II இன் பிரகாரம் மற்றும் 2006.10.19 ஆந் திகதிய 1952/ 2006ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபம் மற்றும் 2007.08.09 ஆந் திகதிய அச்சுற்றுநிருபத்தின் திருத்தத்தின் பிரகாரம் பொலிஸ் மா அதிபரின் அனுமதியுடன் விசேட காரணங்களைக் காட்டி திருமணம் செய்ய இயலும்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருட தகுதிகாண் நிலையில் இலங்கைப் பொலிஸ் சேவையில் பணியாற்ற வேண்டியதுடன் தகுதிகாண் சேவைக்காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை மற்றும் ஏனையவைகளுக்கும் செய்த செலவினங்களைச் செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட வேண்டும். அப்பெறுமதியானது இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும். பதவி விலகலை ஏற்றுக்கொள்வதை 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் I ஆம் தொகுதியின் V ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(எ) ஆட்சேர்க்கப்படும் பயிலுநர் பெண் பொலிஸ் கொஸ்தாபல் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியினை ஆரம்பித்த வுடன் உடனடியாக, இல. 1693/ 2003 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபத்திற்கு இணங்க பொலிஸ் ஒழுக் காற்றுக் கோவையினை பின்பற்றுவதாக பிரமாணம் செய்தல் வேண்டும்.

(ஏ) ஆட்சேர்க்கப்படும் பயிலுநர் பெண் பொலிஸ் கொஸ்தாபல் பொலிஸ் பயிற்சி கல்லூரியில் பயிற்சியை ஆரம்பித்தவுடன் உடனடியாக பொலிஸ் மா அதிபரின் 1804/ 2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சேவைக்கு கட்டுப்பட்டு நடப்பதாக உறுதி/ சத்தியப்பிரமாணம் செய்தல் வேண்டும்.

(ஒ) ஆட்சேர்க்கப்படும் பயிலுநர் பெண் பொலிஸ் கொஸ் தாபல் பதவி நிரந்தரமான பின்னர் பொலிஸ் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு வாய்ப்புண்டு.

11. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) இல் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய 15/ 90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

12. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும். (மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) அண்மையில் பெறப்பட்ட குண நலச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது);

(இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;

(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது பாடத்திற்கு புறம்பாகப் பெற்ற சான்றிதழ்கள் ;

(உ) தொழில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருப்பின்) ;

(ஊ) தேசிய ஆள் அடையாள அட்டையின் நிழற்படப் பிரதி ;

13. (அ) தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்ப தாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும். விண்ணப்பதாரர் இச்சான்றிதழ் இல்லாமல் விண்ணப்பம் அனுப்பினால் அது நிராகரிக்கப்படும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11" X 8" அளவிலான தாளில் தயாரிக் கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தமது சொந்தக் கையெழுத்தில் வேண்டப்பட்ட விபரங்களைப் பூரணப்படுத்தி சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இத்திணைக்களத்தின் எந்த உத்தியோகத்தர்களிடமும் தனிப்பட்ட முறையில் விண்ணப்பங்களை நேரடியாகக் கையளித்தலாகாது.

14. இவ்வறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்பட மாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ வழங்கப்பட மாட்டாது.

பூஜித் ஜயசுந்தர,
பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 01,
2017, மாச்சு 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பொலிஸ் திணைக்களம்**

அலுவலக உபயோகத்திற்கு
அளவு 2" x 2 1/2"

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழில் உள்ள படியும் இருத்தல் வேண்டும்) :-----.

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

(இ) விண்ணப்பிக்கும் பதவி :-----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :-----.
(தேசிய ஆள் அடையாள அட்டையின் பிரதி இணைக்கப் படல் வேண்டும்.)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்துக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.

(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் : -----.

(இ) நிரந்தர முகவரி :-----.

(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

(உ) கடிதம் அனுப்பும் முகவரி :----.

(ஊ) நிரந்தர முகவரிக்குரிய பிரதேச செயலாளர் பிரிவு/ கிராம அலுவலர் பிரிவு :-----.

(எ) தொலைபேசி இலக்கம் (வதிவிடம்) :-----, கையடக்கத் தொலைபேசி இலக்கம் :-----.

6. (அ) தேசிய இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரசையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----

(இ) வம்சாவளி மூலம் இலங்கைப் பிரசையானால் பின்வருபவர்களின் பிறந்த இடங்களைக் குறிப்பிட வும் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரரின் தந்தை வழிப் பாட்டன் : -----.
(4) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் : -----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-

வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. மேலதிகத் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

11. திருமணம் ஆனவரா/ திருமணம் ஆகாதவரா ? :-----.

12. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.

(ஆ) நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? : -----.

13. வேறு ஏதேனும் விசேட திறமைகள்/ தகைமைகள் உண்டா ? :-----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இரு நபர்களின் பெயர், முகவரி களைக் குறிப்பிடுக :-

(i) -----.
(ii) -----.

15. நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் சேவையில் சேவை செய்துள்ளீரா ? (ஆம் எனின், அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக) :-----.

16. (அ) நீங்கள் ஆயுதப்படைச் சேவையில் இருக்கிறீர் களா ? அவ்வாறாயின், குறிப்பிட்ட ஆயுதப்படை சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் ஆயுதப் படைச் சேவையில் இருந்துள்ளீர் களா ? அவ்வாறாயின், அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும் :-----.

17. (அ)நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின், குறிப்பிட்ட ஆயுதப்படைத் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ)நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின், அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் :-----.

18. நீங்கள் ஏதாவது தவறு தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளீரா ? அல்லது தண்டனை பெற்றுள்ளீரா? அவ்வாறாயின், விபரம் தருக. :-----.

19. உங்கள் உறவினர்கள் எவரேனும் தவறு சம்பந்தப்பட்ட சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா ? அவ்வாறாயின், ஏதேனும் குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனரா? அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளதா ? அவ்வாறாயின், விபரம் தருக :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் நான் இலங்கை பொலிஸ் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பினும் எந்த சந்தர்ப்பத்திலும் இலங்கை பொலிஸ் சேவையிலிருந்து உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

20. திணைக்களத் தலைவரின் சான்றிதழ் (தேவையேற்படின்) :

இந்த விண்ணப்பதாரி ....................................... அவர்கள் இத்திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில் சேவையாற்றுபவர் எனவும் அவர் விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது எனவும் தெரிவிக்கிறேன்.

.................,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(பதவி முத்திரை இடப்படல் வேண்டும்).

பதவி :-----.
திகதி :-----.

3-1227/ 1

## இலங்கைப் பொலிஸ்

### பொலிஸ் கொஸ்தாபல் பதவி

இலங்கை பொலிஸ் சேவையில் பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் பதவிக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுநர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, 1 ஆம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடிதத்தின் இடது பக்க மேல் மூலையில் தங்களால் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2017.05.02 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் இலங்கைப் பொலிஸினால் விண்ணப்பங்கள் வழங்கப்பட மாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்.-** ரூபா 3,54,480 - 7 X 3,600 - 27 X 4,440 - ரூபா 4,99,560.

2016.01.01 ஆந் திகதி முதல் 2020.01.01 வரை சம்பளம் பொது நிர்வாக சுற்றுநிருபம் இலக்கம் 3-2016 இன் அட்டவணை II இன் பிரகாரம் வழங்கப்படும். மேலும் 2020.01.01 முதல் முழுமையான சம்பள அளவுத் திட்டம் மேற்குறிப்பிட்டவாறு அமையும்.

மேலும், இவ்வுத்தியோகத்தர்கள் 2013.01.07 ஆந் திகதிய பொலிஸ் மா அதிபர் சுற்றுநிருப இலக்கம் 2416/ 2013 இன் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளுக்கு உரித்துடையவர்களாவர். மேற்குறிப்பிடப்பட்ட சம்பள அளவுத்திட்டத்திற்கு மேலதிகமாக கீழ்வரும் கொடுப்பனவுகளை மாதந்தோறும் பெறுவதற்கும் உரித்துடையவராவர் :

(அ) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு : 7,800 ரூபா ;

(ஆ) பொ. நி. சு. இல. 03/ 2016 இற்கு அமைய அடிப்படைச் சம்பளத்தில் 40% கொடுப்பனவாகக் குறிப்பிடப்பட்ட பதவிக்கு வழங்கப்படும் : 5,712 ரூபா

(இ) கடினக் கொடுப்பனவு : 2,000 ரூபா

(ஈ) சீருடைகளைச் சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு 250 ரூபா ;

(உ) இணைந்த கொடுப்பனவுகள் : 10,500 ரூபா (350 X 30 விசேட கொடுப்பனவுகள் வழங்கும் பிரதேசங்கள்) ;

(ஊ) இணைந்த கொடுப்பனவுகள் : 8,400 ரூபா (350 X 24 விசேட கொடுப்பனவுகள் வழங்காத பிரதேசங்கள்) ;

இந்தக் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக :

(அ) இலவச போக்குவரத்து வசதிகள் ;

(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளிநாடுகளிலும் வைத்திய சிகிச்சைகளைப் பெறுவதற்கு நிதி மூலமான உதவித்தொகைகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும் ;

(இ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;

(ஈ) விளையாட்டுத் திறன்களை வளர்த்துக்கொள்வதற்கான வசதிகள் வழங்கப்படும் ;

(உ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகளுடன், கடினமான வேலைகளுக்காகவும் அத்துடன் திறமையாக கடமைகளைச் செய்வதற்காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும்.

4. **தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

(அ) **வயதெல்லை**.- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18-28 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். ஏற்கனவே இலங்கைப் பொலிஸில் சேவையாற்றும் பொலிஸ் கொஸ்தாபல் சாரதி உத்தியோகத்தர்களுக்கு விண்ணப்ப முடிவுத் திகதியன்று 30 வயதிற்கு உட்பட்டவர்களாக இருந்தால் அவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

(ஆ) **கல்வித் தகைமைகள்**.- க.பொ.த. (சா. தர) பரீட்சையில் கணிதம்/ தாய்மொழி உட்பட இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரண்டு தடவைகள் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரர்கள் முதலாவது தடவையில் ஒரே முறையில் 5 பாடங்களில் கணிதம்/ தாய்மொழி இரண்டு பாடங்களில் அல்லது ஒரு பாடத்திலேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1**.- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையை வகைப்படுத்தும் போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க. பொ. த. (சா.தர) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2**.- க. பொ. த. (சா. தர) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாதவராகக் கருதப்படுவர்.

**குறிப்பு 3**.- விருப்பத்திற்குரிய தமிழ்/ ஆங்கிலம்/ சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடத்திட்டத்திற்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாக கருதப்பட மாட்டாது.

(இ) **பௌதிகத் தகைமைகள் :**

* உயரம் : 5 அடி 4 அங்குலம் (ஆகக் குறைந்தது)

* மார்பு : 30 அங்குலம் (ஆகக் குறைந்தது மூச்சு விட்ட நிலையில்)

**குறிப்பு 1**.- சிறந்த விளையாட்டுத் திறமையுடன் தேசிய விளையாட்டுக் குழாத்திலிருந்து தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் பௌதிகத் தகைமைகள் சற்று குறைவாக இருப்பினும் அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் தற்றுணிபின்படி அடிப்படைத் தகைமை பெறுவர்.

(ஈ) **பார்வை தொடர்பான தேவை**.- ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 இற்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/ 6 ஆகவும் மற்ற கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பினும் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் சேவைக்கு தகைமை அற்றவராவார்.

(உ) **பிற தகைமைகள்**.- விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும் (விவாகரத்துப் பெற்றவர்கள் தகுதியற்றவராகக் கருதப்படுவர்). மற்றைய தகைமைகள் உடைய ஏற்கனவே இலங்கை பொலிஸில் சேவையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இந்நிபந்தனை மாத்திரம் ஏற்புடையதாகாது.

5. **ஆட்சேர்ப்பு முறை**.- விண்ணப்பங்களின்படி தகைமைபெறும் விண்ணப்பதாரிகள் இலங்கைப் பொலிஸ் சேவையில் நடாத்தப்படும் அடிப்படைத் தகைமைப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். அதில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் பின்வரும் உடற்தகுதிப் பரீட்சையில் பங்குபற்றி அதிலும் சித்தியெய்துதல் வேண்டும்.-

* உடற்தகுதிப் பரீட்சை :

1000 மீற்றர் ஓட்டம் - 03 நிமிடம் 44 வினாடி

* உடற் தகுதிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர் :

(i) எழுத்துப் பரீட்சை இரு வினாத்தாள்களை உள்ளடக்கியது. அவை :

* 45 நிமிடங்களில் 500 சொற்களுக்குக் குறையாமல் ஒரு விடயம் தொடர்பாக கட்டுரை எழுதுதல்.

* பொது அறிவும் நுண்ணறிவும் (பரீட்சைக் காலம் : 1 மணித்தியாலம்)

6. **மருத்துவப் பரிசோதனை :**

* விண்ணப்பதாரர் தனது நியமனத்தைப் பெற முன்னர் மருத்துவ பரிசோதனையில் சித்தியடைய வேண்டும். மருத்துவ பரிசோதனையானது ஆட்சேர்ப்பு செயற்பாட்டில் ஒரு அங்கம் மட்டுமே ஆகும். மருத்துவ பரிசோதனையில் சித்தி யடைந்த விண்ணப்பதாரர்கள் தற்போது உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை, முன்னுரிமை மற்றும் அவர்களது திறமை அடிப்படையில் அமைந்த பட்டியலின்படி தெரிவுசெய்யப்படுவர். மருத்துவ பரிசோதனையில் சித்திபெறாதோர் நிராகரிக்கப்படுவர்.

7. **பின்னணி விசாரணைகள்.**- (அ) விண்ணப்பதாரியின் நன்நடத்தையும் அவரின் நெருங்கிய உறவினர்கள், நண்பர்களின் நன்நடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். பின்னணி விசாரணையில் ஏதேனும் பாதகமான காரணங்கள் இருந்தால் அவ்விண்ணப்பதாரர்கள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரர் பொய்யான தகவல்கள் வழங்குவது அல்லது மூடி மறைப்பது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவர்.

8. **அரச கரும மொழிக் கொள்கையை அமுல் படுத்துதல் :**

- பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 2007.04.28 ஆந் திகதிய 07/ 2007ஆம் இலக்க சுற்று நிருபத்தின் பிரகாரம், 2007.07.01 ஆந் திகதியிலிருந்து அரச சேவைக்கு/ மாகாண அரச சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழித் தேர்ச்சியை சேவையில் இணைந்த திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் பெறல் வேண்டும்.

- 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்படும் அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இரண்டாம் மட்ட மொழிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

- நியமனத் திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் உரிய இரண்டாம் மொழித் தேர்ச்சியயைப் பெறாத உத்தியோகத்தர்களின் சம்பள ஏற்றங்கள் நிறுத்தி வைக்கப்படும்.

9. **நியமனக் கொள்கைகள்.**- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உட்பட்டதுமாகும். விதவைகள்/ தபுதாரர்/ அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

10. **சேவை நிபந்தனைகள்.**- (அ) நியமனம் 3 ஆண்டு கால பயிலுநர் அடிப்படையில் இருக்கும்.

(ஆ)தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அரச கரும மொழிக் கொள்கையை அமுல்படுத்தவும் ஏற்கனவே விதிக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் விதிக்கப்படக்கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபன விதிக்கோவையின் I ஆம், II ஆம் தொகுதிகளில் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகள், நிதி ஒழுங்கு விதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்படல் வேண்டும்.

(ஈ) பதவி உறுதிப்படுத்தப்படுவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தரும் இலங்கை பொலிஸினால் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்தியெய்தல் வேண்டும். குறித்த பரீட்சைகளில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு இடமுண்டு.

(உ) நியமனம் பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொலிஸ்மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் உறுதிப்படுத்தும் வரை திருமணம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள். எனினும் 1973.02.28 ஆந் திகதிய 41 ஆம் இலக்கம் கொண்ட பொலிஸ் வர்த்தமானியின் பகுதி II இன் பிரகாரமும் மற்றும் 2006.10.19 ஆந் திகதிய மற்றும் 1952/ 2006 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்று நிருபத்தின் பிரகாரமும், 2007.08.09 ஆந் திகதிய திருத்தஞ் செய்யப்பட்ட அச்சுற்றுநிருபத்தின் பிரகாரமும் திருமணம் செய்வதற்கான விசேட காரணங்களைத் தெரிவித்து பொலிஸ் மா அதிபரின் அனுமதியுடன் திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருட பயிலுநர் நிலையில் பொலிஸில் பணியாற்ற வேண்டியதுடன் இப்பயிலுநர் சேவைக்காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை மற்றும் ஏனையவைகளுக்கும்

செய்த செலவினங்களைச் செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட வேண்டும். அப்பெறுமதியானது இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும். பதவி விலகலை ஏற்றுக் கொள்ளலானது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் I ஆம் தொகுதியின் V ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(எ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல்கள் பயிற்சியினை ஆரம்பித்தவுடன் உடனடியாக 1693/ 2003 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபத்திற்கு இணங்க பொலிஸ் ஒழுக்காற்று கோவையினை பின்பற்றுவதாக சத்தியப்பிரமாணம்/ உறுதி செய்தல் வேண்டும்.

(ஏ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல்கள் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் உடனடியாக பொலிஸ் மா அதிபரின் 1804/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அபிமானம்மிக்க அரச சேவைக்கான அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக சுய உறுதி செய்தல் வேண்டும்.

(ஒ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல்கள் தமது பதவியில் உறுதிப்படுத்திய பின் இலங்கைப் பொலிஸில் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவார்.

11. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) இன் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட அரச சேவை பதவிகளுக்கு நியமனம் செய்வதற்குரிய பொது நிபந்தனைகள் செல்லுபடியாகும்.

(ஆ)1990.03.10 ஆந் திகதிய 15/ 90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

12. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும். (மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது) ;

(இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;

(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது ஏனைய புறக் கிருத்தி செயற்பாடுகள் பற்றிய சான்றிதழ்கள் ;

(உ) சேவையில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருப்பின் மாத்திரம்) ;

(ஊ) தேசிய ஆள் அடையாள அட்டையின் நிழற்படப் பிரதி ;

13. (அ) தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்ப தாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11" x 8" அளவிலான தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தமது சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்தி சான்றிதழ்களது பிரதிகளுடன் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இத்திணைக்களத்தின் எந்த உத்தியோகத்தர்களிடமும் விண்ணப்பங்களை பிரத்தியேகமாக கையளித்தலாகாது.

14. இவ்வறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்பட மாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ வழங்கப்பட மாட்டாது.

பூஜித் ஜயசுந்தர,
பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 01,
2017, மாச்சு 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| அலுவலக உபயோகத்திற்கு |
|---|

அளவு 2" x 2 1/ 2"

**இலங்கைப் பொலிஸ்**

பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் பதவி

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழில் உள்ள படியும் இருத்தல் வேண்டும்) :-----.

   (ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

   (இ) விண்ணப்பிக்கும் பதவி :-----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :-----. (பிரதியை இணைக்கவும்.)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

   பிறந்த இடத்துக்குரிய பிரதேச செயலகப் பிரிவு :-----.
   மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.
   (ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் : -----.

(இ) நிரந்தர முகவரி :-----.

(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

(உ) கடிதம் அனுப்பும் முகவரி :-----.

(ஊ) நிரந்தர முகவரிக்குரிய கிராம அலுவலர் பிரிவு : -----. பிரதேச செயலகம் :-----.

(எ) தொலைபேசி இலக்கம் :வதிவிடம் :-----, கையடக்கத் தொலைபேசி இலக்கம் :-----.

6. (அ) தேசிய இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரசையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா ? (பதிவு மூலம் எனின், பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----

(இ) நீங்கள் வம்சாவளி மூலம் இலங்கைப் பிரசையானால் பின்வருபவர்களின் பிறந்த இடங்களைக் குறிப் பிடவும் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரரின் தந்தைவழி பாட்டன் :-----.
(4) விண்ணப்பதாரரின் தந்தைவழி முப்பாட்டன் : -----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----. (பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-

வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----; மார்பு : (அங்குலம்) :-----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப் பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) : -----.

10. மேலதிகத் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

11. திருமணம் ஆனவரா/ திருமணம் ஆகாதவரா ? :-----.

12. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.

(ஆ) நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? : -----.

13. வேறு ஏதேனும் விசேட திறமைகள்/ தகைமைகள் உண்டா ? :-----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இரு நபர்களின் பெயர் முகவரிகளைக் குறிப்பிடுக :-

(அ)-----.
(ஆ)-----.

15. நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் சேவையில் சேவை செய்துள்ளீரா ? (ஆம் எனின், அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக ? :-----.

16. (அ) நீங்கள் ஆயுதப்படை சேவையில் இருக்கிறீர் களா ? அவ்வாறாயின், குறிப்பிட்ட ஆயுதப்படை சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் ஆயுதப்படையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின், அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும் :-----.

17. (அ) நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருக்கின்றீர்களா ? அவ்வாறாயின், குறிப்பிட்ட படைத் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும் :-----.

(ஆ) நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின், அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் :-----.

18. நீங்கள் ஏதாவது குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளீரா ? அல்லது தண்டனை பெற்றுள்ளீரா ? அவ்வாறாயின், விபரம் தருக. :-----.

19. உங்கள் உறவினர்கள் எவரேனும் குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட் டுள்ளனரா ? அவ்வாறாயின், ஏதேனும் குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனரா ? அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளதா? அவ்வாறாயின், விபரம் தருக :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் நான் இலங்கை பொலிஸ் சேவையில்

சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பினும் எந்த சந்தர்ப்பத்திலும் இலங்கைப் பொலிஸ் சேவையிலிருந்து உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

20. திணைக்களத் தலைவரின் சான்றிதழ் (தேவையேற் படின்) :

இந்த விண்ணப்பதாரி ....................................... அவர்கள் இத்திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில் சேவையாற்றுபவர் எனவும் அவர் விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் அவரை இச்சேவை யிலிருந்து விடுவிக்க முடியும் எனவும் தெரிவிக்கிறேன்.

.................,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பதவி :-----.
திகதி :-----.

3-1227/ 2

---

**இலங்கைப் பொலிஸ்**

பொலிஸ் கொஸ்தாபல் சாரதிப் பதவி

இலங்கை பொலிஸ் சேவையில் பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவிக்கு இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுநர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, 1 ஆம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2017.05.02 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பி வைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் இலங்கைப் பொலிஸினால் விண்ணப் பங்கள் வழங்கப்பட மாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்.-** ரூபா 3,54,480 - 7 x 3,600 - 27 x 4,440 - ரூபா 4,99,560.

2016.01.01 ஆந் திகதி முதல் 2020.01.01 ஆந் திகதிவரை சம்பளம் பொது நிர்வாக சுற்றுநிருப இலக்கம் 3-2016 இன் அட்டவணை II இன் பிரகாரம் வழங்கப்படும். மேலும் 2020.01.01 ஆந் திகதி முதல் முழுமையான சம்பள அளவுத்திட்டம் மேற்குறிப்பிட்டவாறு அமையும்.

* மேலும், இவ்வுத்தியோகத்தர்கள் 2013.01.07 ஆந் திகதிய பொலிஸ் மா அதிபர் சுற்றுநிருப இலக்கம் 2416/ 2013 இன் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளுக்கு உரித்துடையவராவர். மேற்குறிப்பிட்ட சம்பளத்திற்கு மேலதிகமாக கீழ்வரும் கொடுப்பனவுகளை மாதம்தோறும் பெறுவதற்கும் உரித்துடையவராவர்.

(அ) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு : 7,800 ரூபா ;
(ஆ) பொ. நி. சு. இல. 03/ 2016 இற்கு அமைய அடிப்படைச் சம்பளத்தில் 40% கொடுப்பனவாகக் குறிப்பிடப்பட்ட பதவிக்கு வழங்கப்படும் : 5,712 ரூபா
(இ) கடினக் கொடுப்பனவு : 2,000 ரூபா
(ஈ) சீருடைகளைச் சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு 250 ரூபா ;
(உ) இணைந்த கொடுப்பனவுகள் : 10,500 ரூபா (350 ரூபா x 30 விசேட கொடுப்பனவுகள் வழங்கும் பிரதேசங்கள்) ;
(ஊ) இணைந்த கொடுப்பனவுகள் : 8,400 ரூபா (350 ரூபா x 24 விசேட கொடுப்பனவுகள் வழங்காத பிரதேசங்கள்) ;

**இந்தக் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக :**

(அ) இலவச போக்குவரத்து வசதிகள் ;
(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளிநாடுகளிலும் சிகிச்சைகளை பெறுவதற்கு நிதி மூலமான உதவித் தொகைகளைப் பெற்றுக்கொள்ளல் பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும் ;
(இ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப் படும் ;
(ஈ) விளையாட்டுத் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கான வசதிகள் வழங்கப் படும் ;
(உ) கடமைகளுக்கான பிரயாணச் செலவு களுடன், கடினமான வேலைகளுக் காகவும் அத்துடன் திறமையாக கடமை களைச் செய்வதற்காகவும் வெகு மதிகளாகப் பணம் வழங்கப்படும் ;

4. **தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

(அ) **வயதெல்லை.-** வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 19-29 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) **கல்வித் தகைமைகள்.-** க.பொ.த. (சா. தர) பரீட்சையில் கணிதம்/ தாய்மொழி உட்பட இரண்டு அமர்வுகளிற்கு மேற்படாமல் குறைந்தது 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரண்டு அமர்வுகள் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரர்கள் முதலாவது அமர்வில் ஒரே

முறையில் 5 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் என்பதோடு அவற்றில் கணிதம் மற்றும் தாய்மொழி ஆகிய இரண்டு பாடங்களில் அல்லது அந்த இரண்டு பாடங்கிளல் ஒரு பாடத்திலேனும் ஒன்றில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

***குறிப்பு 1.***- *இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக் கையை வகைப்படுத்தும்போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க. பொ. த. (சா.தர) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.*

***குறிப்பு 2.***- *க.பொ. த. (சா.தர) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாதவராக கருதப்படும்.*

***குறிப்பு 3.***- *விருப்பத்துக்குரிய தமிழ்/ ஆங்கிலம்/ சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடத்திட்டத்துக்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாக கருதப்பட மாட்டாது.*

(இ) ***பௌதீகத் தகைமைகள் :***

* *உயரம் :* 5 அடி 3 அங்குலம் (ஆகக் குறைந்தது)
* *மார்பு :* 30 அங்குலம் (ஆகக் குறைந்தது மூச்சுவிட்ட நிலையில்)

**குறிப்பு 1.**- சிறந்த விளையாட்டுத் திறமையுடன் தேசிய விளையாட்டுக் குழாத்திலிருந்து தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் பௌதிகத் தகைமைகள் சற்று குறைவாக இருப்பினும் அவர் பிற தகைமை களைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் தற்றுணிபின்படி அடிப்படைத் தகைமை பெறுவர்.

(ஈ) ***தொழில் தகைமைகள் :***

(i) இலகு வாகனங்களை அல்லது கனரக வாகனங்களை ஓட்டும் திறமை இருப்பதற்கான சான்றிதழ் இருத்தல்.

(ii) மேற்குறிப்பிட்ட சான்றிதழைப் பெற்றபின் ஆகக் குறைந்தது ஒரு வருடத்திற்கு மோட்டார் வாகனம் செலுத்திய அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**- வாகனம் சம்பந்தமாக தொழில்நுட்ப அறிவு, வாகனம் திருத்திய அனுபவம் அத்துடன் நெடுங்காலமாக வாகனம் செலுத்திய அனுபவம் இருந்தால் அவ்விண்ணப்பதாரருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

* வாகனத்தை திறமையுடன் செலுத்து வதற்கு தேவைப்படும் உடல் அவயங் களின் இயக்கத்திற்கு தடையாக இருக்கும் ஏதாவது அங்கவீன அல்லது பிற உடல் குறைபாடுகளை உடைய விண்ணப்பதாரர் சேவைக்கு பொருத்தமானவர் எனும் வைத்திய சாலை சான்றிதழ் பெற்றிருப்பினும் அவர் இப்பதவிக்கு தகுதி அற்றவராகக் கருதப்படுவர்.
* அடிப்படைத் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர் வாகனம் செலுத்துவது மற்றும் பராமரிப்பு தொடர்பில் பரீட்சிக்கப்படுவர். அதுபோலவே வீதிகள் போக்குவரத்து சைகைகள் தொடர்பாக விண்ணப்பதாரர் பெற்றுள்ள அறிவு ஒவ்வொரு விண் ணப்பதாரரும் வாகனம் செலுத்துவதற்கு திறமை பெற்றுள்ள வாகனங்களும் இயந்திர தொழில்நுட்பம் தொடர்பான அடிப்படை அறிவு ஆகியனவும் பரீட்சிக்கப்படும்.

(உ) *பார்வை தொடர்பான தேவை.*- ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 க்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவும் மற்ற கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பின் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரண மாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் சேவைக்கு தகைமை அற்றவராவார்.

(ஊ) ***பிற தகைமைகள்.***- விண்ணப்பதாரர் திருமண மாகாதவராக இருத்தல் வேண்டும் (விவாகரத்துப் பெற்றவர்கள் தகுதியற்றவராகக் கருதப்படுவர்.)

5. **ஆட்சேர்ப்பு முறை :**

* விண்ணப்பங்களின்படி தகைமையைப் பெறும் விண்ணப்பதாரிகள் இலங்கைப் பொலிஸினால் நடாத்தப்படும்

அடிப்படைத் தகைமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். அதில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் பின்வரும் உடற்தகுதிப் பரீட்சையில் பங்குபற்றி அதிலும் சித்தியெய்தல் வேண்டும்.-

*** உடற் தகுதிப் பரீட்சை**

1000 மீற்றர் ஓட்டம் - 3 நிமிடம் 44 வினாடி

* உடற் தகுதிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் படுவர். நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் இறுதி தொழில்சார் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

6. **தொழில்சார் தகைமைகள் - பொலிஸ் கொஸ்தாபல் சாரதிப் பதவி** :

6.1 இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரின் பணிப்புரையின் கீழ் பொலிஸ் சாரதி பாடசாலையின் உதவிப் பணிப்பாளரினால் தொழில்சார் பரீட்சை நடாத்தப்படும்.

6.2 தொழில்சார் பரீட்சைக்கு 100 புள்ளிகள் ஒதுக்கப் பட்டுள்ளது. தொழில்சார் பரீட்சை பின்வருமாறு நடாத்தப்படும் :-

| | | |
|---|---|---|
| (அ) | வாகனம் செலுத்தும் தகுதி | - 50 புள்ளிகள் |
| (ஆ) | வீதிச்சட்ட அறிவுரை | - 25 புள்ளிகள் |
| (இ) | வாகனப் பராமரிப்பு மற்றும் சிறிய திருத்த வேலைகள் தொடர்பான அறிவு | - 25 புள்ளிகள் |

6.3 *தொழில்சார் பரீட்சை*.- வாகனம் செலுத்தும் தகுதிப் பரீட்சைக்கு ஒதுக்கப்பட்டுள்ள உச்ச எல்லையாகிய 50 புள்ளிகளில் ஆகக்குறைந்தது 25 புள்ளிகளும், வீதிச்சட்ட அறிவுரை புத்தகம் தொடர்பாக ஒதுக்கப்பட்டுள்ள உச்ச எல்லையாகிய 25 புள்ளிகளில் ஆகக்குறைந்தது 12.5 புள்ளிகளும், வாகனப் பராமரிப்பும் சிறிய திருத்த வேலைகள் தொடர்பான அறிவுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள உச்ச எல்லையாகிய 25 புள்ளிகளில் ஆகக்குறைந்தது 12.5 புள்ளிகளாவது பெற்று முழுப்புள்ளிகள் 100 இல் ஆகக் குறைந்தது 50 புள்ளிகளாவது பெறும் விண்ணப்பதாரர்கள் தொழில்சார் பரீட்சையில் சித்தியடைந்தவர்களாக கருதப்பட்டு மருத்துவப் பரிசோதனைக்கு அழைக்கப்படுவர்.

**குறிப்பு**.- சேர்க்கப்பட்ட பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பயிலுநர் காலப்பகுதிக்குள் கனரக வாகனங்களை ஓட்டுவதற்கான தகைமையைப் பெற பொலிஸ் வித்தியாலயத்தில் நடைபெறும் கனரக வாகன ஓட்டும் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

7. **மருத்துவப் பரிசோதனை** :

* விண்ணப்பதாரர் தனது நியமனத்தைப் பெற முன்னர் மருத்துவப் பரிசோதனையில் சித்தியடைதல் வேண்டும். மருத்துவப் பரிசோதனையானது ஆட் சேர்ப்புச் செயற்பாட்டில் ஒரு அங்கம் மட்டுமே ஆகும். மருத்துவப் பரிசோதனையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் தற்போது உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை, முன்னுரிமை மற்றும் அவர்களது திறமை அடிப்படையில் அமைந்த பட்டியலின்படி தெரிவுசெய்யப்படுவர். மருத்துவப் பரிசோதனையில் சித்திபெறாதோர் நிராகரிக்கப்படுவர்.

8. **பின்னணி விசாரணைகள்**.- (அ) விண்ணப்பதாரரின் நன்நடத்தையும் அவரின் நெருங்கிய உறவினர்கள், நண்பர்களின் நன்நடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். பின்னணி விசாரணைகளில் ஏதேனும் பாதகமான காரணிகள் இருந்தால் அவ் விண்ணப்பதாரர்கள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரர் பொய்யான தகவல்கள் வழங் குவது அல்லது அதை மூடி மறைப்பது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின்னர் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவார்.

9. **அரச கரும மொழிக் கொள்கையை அமுல் படுத்தல்** :

- பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் 2007.04.28 ஆந் திகதி வெளியிடப் பட்ட 07/ 2007ஆம் இலக்க சுற்று நிருபத்தின் பிரகாரம், 2007.07.01 ஆந் திகதியிலிருந்து அரச சேவைக்கு/ மாகாண அரச சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் தாம் சேவையில் சேர்ந்த அரசகரும மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழித் தேர்ச்சியை சேவையில் இணைந்த திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் பெறல் வேண்டும்.

- 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்படும் அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இரண்டாம் மட்ட மொழிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

- நியமனத் திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் உரிய இரண்டாம் மொழித் தேர்ச்சியைப் பெறாத உத்தியோகத்தர்களின் சம்பள ஏற்றங்கள் நிறுத்தி வைக்கப்படும்.

10. **நியமனக் கொள்கைகள்**.- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உட்பட்டதுமாகும். விதவைகள்/ தபுதாரர்/ அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

*11.* **சேவை நிபந்தனைகள் :**

(அ) நியமனம் 3 ஆண்டு காலப் பயிலுநர் அடிப்படையில் இருக்கும்.

(ஆ) ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர் அரசகரும மொழிக் கொள்கையை அமுல்படுத்தவும் ஏற்கனவே விதிக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் விதிக்கப்படக்கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபன விதிக்கோவையின் I ஆம், II ஆம் தொகுதிகளிலான ஏற்பாடுகளுக்கும் நிதி ஒழுங்கு விதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்படல் வேண்டும்.

(ஈ) பதவி உறுதிப்படுத்துவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தரும் இலங்கைப் பொலிஸினால் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்தியெய்தல் வேண்டும். குறித்த பரீட்சைகளில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு இடமுண்டு.

(உ) நியமனம்பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொலிஸ் மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் உறுதிப்படுத்தும் வரை திருமணம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள். எனினும், 1973.02.28 ஆந் திகதிய மற்றும் 41 ஆம் இலக்கம் கொண்ட பொலிஸ் வர்த்தமானியின் பகுதி II இன் பிரகாரமும் மற்றும் 2006.10.19 ஆந் திகதிய மற்றும் 1952/ 2006 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்று நிருபத்தின் பிரகாரமும் 2007.08.09 ஆந் திகதிய திருத்தம் செய்யப்பட்ட அச்சுற்று நிருபத்தின் பிரகாரமும் திருமணம் செய்வதற்கான விசேட காரணங்களைத் தெரிவித்து பொலிஸ் மா அதிபரின் அனுமதியுடன் திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருட பயிலுநர் நிலையில் இலங்கைப் பொலிஸில் பணியாற்ற வேண்டியதுடன் பயிலுநர் சேவைக்காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை மற்றும் ஏனையவைகளுக்கும் செய்த செலவினங்களைச் செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட வேண்டும். அப்பெறுமதி இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும். பதவி விலகலை அங்கீகரிப்பது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் I ஆம் தொகுதியின் V ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(எ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதிகள் பயிற்சியினை ஆரம்பித்தவுடன் உடனடியாக, 1693/ 2003 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபத்திற்கு இணங்க பொலிஸ் ஒழுக்காற்று கோவையினைப் பின்பற்றுவதாக சத்தியப்பிரமாணம்/ உறுதிசெய்தல் வேண்டும்.

(ஏ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதிகள் பொலிஸ் பயிற்சி கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் உடனடியாகப் பொலிஸ் மா அதிபரின் 1804/ 2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அபிமானம் மிக்க அரச சேவைக்கான அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக சுய உறுதி செய்தல் வேண்டும்.

(ஒ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதிகள் தமது பதவியில் உறுதிப்படுத்திய பின் இலங்கைப் பொலிஸில் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடைய வராவார்.

*12.* (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (II அ) வின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரச சேவை பதவிகளுக்கு நியமனம் செய்வதற்குரிய பொது நிபந்தனைகள் செல்லுபடியானதாகும்.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய மற்றும் பதவிகளிற்கு நியமனம் செய்வதற்குரிய 15/ 90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக் கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

*13.* விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும். (மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணநலச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது);

(இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;

(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது ஏனைய புறக் கிருத்தி செயற்பாடுகள் பற்றிய சான்றிதழ்கள்;

(உ) தொழில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருப்பின் மாத்திரம்) ;

(ஊ) தேசிய அடையாள அட்டையின் நிழற்படப் பிரதி ;

(எ) சாரதி அனுமதிப்பத்திரத்தின் நிழற்படப் பிரதி.

*14.* (அ) தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்ப தாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது நிறுவனத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11" x 8" அளவிலான தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தமது சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்தி சான்றிதழ்களது பிரதிகளுடன் இரண்டாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு

அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் எந்த ஒரு உத்தியோகத்தரிடமும் விண்ணப்பங்களை பிரத்தியேகமாக கையளித்தலாகாது.

15. இவ்வறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பான விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்பட மாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ இலங்கை பொலிஸினால் வழங்கப்பட மாட்டாது.

பூஜித் ஜயசுந்தர,
பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 01,
2017, மாச்சு 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பொலிஸ்**

பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவி

அலுவலக உபயோகத்திற்கு
அளவு 2" X 2 1/ 2"

1. (அ)முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழ்களில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்) :-----.
(ஆ)பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.
(இ) விண்ணப்பதாரரின் பதவி :-----.
2. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :-----.
(தேசிய ஆள் அடையாள அட்டையின் பிரதி இணைக்கப் படல் வேண்டும்.)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்துக்குரிய பொலிஸ் நிலையம் :----.
மாகாணம் :-----.

5. (அ)தற்போதைய முகவரி :-----.
(ஆ)தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
(இ) நிரந்தர முகவரி :-----.
(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
(உ) கடிதம் அனுப்பும் முகவரி :----.
(ஊ) நிரந்தர முகவரிக்குரிய கிராம அலுவலர் பிரிவு :-----. பிரதேச செயலகம் :-----.
(எ) தொலைபேசி இலக்கம் (வதிவிடம்) :-----, கையடக்க தொலைபேசி இலக்கம் :-----.

6. (அ)தேசிய இனம் :-----.
(ஆ)நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரசையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----

(இ) நீங்கள் வம்சாவளி மூலம் இலங்கைப் பிரசையானால் பின்வருபவர்களின் பிறந்த இடங்களைக் குறிப்பிடவும் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரின் தந்தை வழி பாட்டன் :-----.
(4) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் : -----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-

வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----; மார்பு : அங்குலம் :-----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. (அ)வாகனம் ஓட்டும் அனுமதிப்பத்திர இலக்கம் :-----.
(ஆ)வாகனம் ஓட்டும் அனுமதிப்பத்திரம் பெற்ற திகதி : -----.
(இ) திறமைபெற்ற வாகனங்களின் வகுப்புகள் :-----.
(சான்றிதழின் பிரதிகளை இணைக்கவும்.)

11. மேலதிகத் தகைமைகள் உண்டா ? (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

12. திருமணம் ஆனவரா/ திருமணம் ஆகாதவரா ? :-----.

13. (அ)தற்போது செய்யும் தொழில் :-----.

(ஆ)நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? : -----.

14. வேறு ஏதேனும் விசேட திறமைகள்/ தகைமைகள் உண்டா ? :-----.

15. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இரு நபர்களின் பெயர் முகவரிகளைக் குறிப்பிடுக :-

(அ)-----.
(ஆ)-----.

16. நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் சேவையில் சேவை செய்துள்ளீரா ? (ஆம் எனின், அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக) :-----.

17. (அ)நீங்கள் ஆயுதப்படை சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின், குறிப்பிட்ட ஆயுதப்படை சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ)நீங்கள் ஆயுதப்படையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின், அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும் :-----.

18. (அ)நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின், குறிப்பிட்ட படைத் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ)நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின், அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் :-----.

19. நீங்கள் ஏதாவது குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளீரா ? அல்லது தண்டனை பெற்றுள்ளீரா? அவ்வாறாயின் விபரம் தருக. :-----.

20. உங்கள் உறவினர்கள் எவரேனும் குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா ? அவ்வாறாயின் ஏதேனும் குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனரா ? அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா ? அவ்வாறாயின் விபரம் தருக : -----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் நான் இலங்கைப் பொலிஸ் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பினும் எந்த சந்தர்ப்பத்திலும் பொலிஸ் சேவையிலிருந்து உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

21. நிறுவகத் தலைவரின் சான்றிதழ் (தேவையேற்படின்) :

இந்த விண்ணப்பதாரி ..................................... அவர்கள் இத்திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில் சேவையாற்றுபவர் எனவும் அவர் விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் அவரை இச்சேவையில் இருந்து விடுவிக்க முடியும் எனவும் தெரிவிக்கிறேன்.

.................,
(நிறுவகத் தலைவரின் கையொப்பம்).
பதவி முத்திரை இடப்பட வேண்டும்.

பதவி :----.
திகதி :-----.

3-1227/ 3

---

## நில அளவைச் சபை

(2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நிலஅளவைச் சட்டத்தின்கீழ் ஸ்தாபிக்கப்பட்டது.)

மத்திய மட்ட முகாமைத்துவச் சேவை வகைசார் செயலாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரல்

நில அளவைச் சபையின் செயலாளர் பதவிக்காக ஆண்/ பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசையாக இருக்கவேண்டியதுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அளவையியல், சிவில் இயந்திரவியல் அல்லது கட்டடக் கலை விஞ்ஞானப் பட்டம் ஒன்றைப் பெற்றிருப்பின் அரச கூட்டுத்தாபனம், சபை அல்லது நியதிச் சட்ட நிறுவனமொன்றில் முகாமைத்துவப் பட்டப் பதவியொன்றில் ஆகக்குறைந்ததாய் உரிய துறையில் ஒரு (01) வருடமாவது சேவையாற்றிய அனுபவமும் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

2. மேலதிக தகைமைகளைக் கணினியைக் கையாள்வதில் கணிசமான ஆற்றலுடன் சிங்கள, ஆங்கில மொழிகளில் சிறப்பான தேர்ச்சியும் அவ்விரு மொழிகளில் ஆவணங்கள் தொடர்பிலான சகலவிதமான நடவடிக்கைகளிலும் ஈடுபடக்கூடிய நிபுணத்துவ அறிவு கொண்டிருத்தல் வேண்டும். தமிழ் மொழியை எழுதவும், வாசிக்கவும் தெரிந்திருப்பது விசேட தகைமையாகக் கருதப்படும்.

3. விண்ணப்பதாரிகள் 2017.04.21 ஆந் திகதியன்று 22 வயதிற்குக் குறையாதவராகவும், 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். அவர்கள் செயலாளர் பதவிக்கு ஒப்படைக்கப்படும் பணிகளையும், பொறுப்புக்களையும் சிறப்பாய் நிறைவேற்றத் தேவையான உடல் மற்றும் உள ரீதியான தகைமைகளைக் கொண்டவர்களாகவும்,

உன்னத நடத்தை உள்ளவராகவும் இருத்தல் வேண்டும். பதிவுசெய்யப்பட்ட உரிமம்பெற்ற நில அளவையாளர் ஒருவராக தனியார் அளவைகளில் ஈடுபடுதலாகாது. அதாவது வருடாந்த நிலஅளவை உத்தரவுப்பத்திரம் பெறுவதிலிருந்து தவிர்ந்துகொள்ளல் வேண்டும்.

4. சேர்த்துக்கொள்ளப்பட இருப்பவர் ஒருவர் மாத்திரமே என்பதால் தேர்ந்தெடுக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட அளவினர் மட்டும் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டுப் பொருத்தமான ஒருவர் தெரிவுசெய்யப்படவுள்ளார். எவ்விதத்திலாவது அழுத்தங்கள் பிரயோகிக்க முயன்றால் நபருக்குப் பாதகமான நிலைமைகளைத் தோற்றுவிக்க இடமுண்டு.

5. இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் (2020.01.01 ஆந் திகதிக்கு) கீழ்க்காணப்படுகிறது :

MM1-II : ரூபா 53,175 - 10 x 1,375 - 15 x 1,910 - ரூபா 95,575.

6. இந்நியமனம் ஒரு நிரந்தர நியமனமாவதுடன், மூன்றாண்டுகால தகுதிகாண் நிலைக்கு உட்பட்டதாகும். ஊழியர் சேமலாப நிதியம், தொழில்தருநர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றுக்கு உரித்துரிமை கொண்டது.

7. விண்ணப்பதாரர்கள் தமது முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, கல்வி மற்றும் தொழில் தகைமைகள், அனுபவம் ஆகியன உள்ளடங்கிய விண்ணப்பமொன்றைத் தாமாகவே தயாரித்து 2017, ஏப்பிறல் 21 ஆந் திகதிக்கு முன்பதாக "தலைவர், நிலஅளவைச் சபை, இல. 150, கிருல வீதி, கொழும்பு 5" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். அத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் சகல விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "செயலாளர் பதவிக்குரிய விண்ணப்பம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும். கல்வி மற்றும் தொழில் ரீதியான பயிற்சி குறித்த சான்றிதழ்களினதும், பிறப்புச் சான்றிதழ்களினதும், தேசிய ஆள் அடையாள அட்டையினதும் நிழற்படப் பிரதிகள் மாத்திரம் விண்ணப்பப்பத்திரத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

பி. எம். பி. உதயகாந்த,
தலைவர்.

நிலஅளவைச் சபை,
2017, மாச்சு 01.

3-1225

---

## உள்ளக அலுவல்கள், வடமேல் மாகாண அபிவிருத்தி மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் பாதுகாப்பு உதவியாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தில் வெற்றிடமாக இருக்கும் முகாமைத்துவ உதவி தொழில்நுட்பம் அல்லாத 2 ஆம் தொகுதி சேவைக்குரிய பாதுகாப்பு உதவியாளர் பதவிகள் 05 வெற்றிடமாகி உள்ளதனால் ஆட்சேர்ப்புக்கான விண்ணப்பங்கள் இலங்கையர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

1.1 **கல்வித் தகைமைகள்** :

* சிங்களம்/தமிழ், ஆங்கிலம், கணிதம் உட்பட ஏனைய இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத்தராதரப்பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் சித்தியெய்தி இருத்தல் வேண்டும் ;

அத்துடன்

* கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் பாடநெறிகளில் குறைந்தபட்சம் இரண்டு (02) பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். (பொது உளச்சார்பு தவிர்ந்த) பழைய பாடத்திட்டத்தின் பிரகாரம் மூன்று (03) பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

1.2 **அனுபவங்கள்** :

* குறிப்பிட்ட துறைசார்ந்த ஒரு வருடகால அனுபவம்.

1.3 **சம்பள அளவுத்திட்டம்**.- MN 1 - 2016

27,140 ரூபா - 10 x 300 - 11 x 350 - 10 x 495 - 10 x 660 - 45,540 ரூபா.

2016.02.25 ஆந் திகதியின் 03/ 2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் குறித்த சம்பள அளவுத்திட்டத்தில் வேலைக்கமர்த்தப்படும்.

1.4 **ஆட்சேர்ப்பு முறை.-** ஆட்சேர்ப்புக்கான எழுத்து மூலமான பரீட்சை நடாத்தப்படும். எழுத்துமூலப் பரீட்சையில் சித்திபெற்ற விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தகைமைகளின் பிரகாரம் தெரிவுசெய்யப்படுவார்கள்.

*எழுத்துமூலப் பரீட்சை :*

| *விடயம்* | *ஆகக்கூடிய புள்ளிகள்* | *பெறவேண்டிய புள்ளிகள்* |
|---|---|---|
| 1. உளச்சார்பு | 100 | 40% |
| 2. பொது அறிவு | 100 | 40% |

*எழுத்துமூலப் பரீட்சைக்குரிய பாடவிதப்புரை :*

| *வினாப்பத்திரம்* | *பாட விதப்புரை* |
|---|---|
| 1. உளச் சார்பு | விண்ணப்பதாரியின் மொழியறிவு, தர்க்கத் திறன் மற்றும் கணிதத் திறமைகள் ஆகியவற்றை மதிப்பீடு செய்யும் வகையிலும், சுருக்க விடையளிக்கக்கூடிய வகையிலும் அமைந்துள்ள பல்தேர்வு வினாப்பத்திரம். 30 வினாக்களை உள்ளடக்கியது. |
| 2. பொது அறிவு | கடமைகள் தொடர்பான விண்ணப்பதாரியின் அறிவைப் பரீட்சிக்கும் வகையிலும் அத்துடன் பொருளாதாரப் பின்னணி, உள்நாட்டுத் தகவல்கள் மற்றும் அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் நிகழ்ச்சி நிரல்கள், செயற்பாடுகள் தொடர்பான அறிவைப் பரீட்சிக்கும் வகையிலும் அமைந்த பல்தேர்வு வினாப்பத்திரம். |

* **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்.-** இப்பதவி நிரந்தரமானது. மூன்று வருடகால தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது. தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக எதிர்காலத்தில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் கொள்கைத் திட்டங்களுக்கமைய தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுமிடத்து தாங்கள் அதற்குக் கட்டுப்பட்டவர்களாவீர்கள். விண்ணப்பதாரிகள் இப்பதவியில் சேர்த்துக்கொள்ளப்பட்டால் கட்டாயமாக விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

இரவு, பகல் சேவை முறைக்கு அமைய சேவையில் ஈடுபடுதல் கட்டாயமாகும்.

* **வேறு தகைமைகள் :**

(அ) விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) நன்னடத்தை உள்ளவராக இருத்தல் வேண்டும் ;

(இ) 2017.04.25 ஆந் திகதிக்கு 18 வயதிற்குக் குறையாதவராகவும், 30 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் ;

(ஈ) விண்ணப்பதாரிகள் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றக்கூடியவராகவும், கடமையாற்றுவதற்கான சிறந்த தேகாரோக்கியமும், சிறந்த மன உறுதி உடையவராகவும் இருத்தல் வேண்டும் ;

(உ) உயரம் 5 அடி 4 அங்குலத்திற்குக் கூடியவராகவும், மார்பளவு 32 அங்குலம் அல்லது அதற்குக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும் ;

(ஊ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று சகல தகைமைகளையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

* **விண்ணப்பங்களை அனுப்பிவைக்கும் முறை.-** விண்ணப்பங்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் A4 அளவிலான கடதாசியில் இரு பக்கத்தையும் உபயோகித்து தயாரிக்கப்பட்டு விண்ணப்பதாரியின் கையெழுத்தில் பூர்த்திசெய்யப்படல் வேண்டும். அனைத்துக் கல்விச் சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் தொழிற் தகைமைகளைச் சான்றுப்படுத்தும் சான்றிதழ்களின் பிரதிகள் இணைத்திருத்தல் அவசியமாகும்.

* இலக்கம் 01 தொடக்கம் 09 வரையான விடயங்களை முதலாம் பக்கத்திலும், இலக்கம் 10 தொடக்கம் 12 வரையான விடயங்களை இரண்டாம் பக்கத்திலும், இலக்கம் 13 தொடக்கம் 15 வரையான விடயங்களை மூன்றாம் பக்கத்திலும் அமையும் வகையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

* குறிப்பிட்ட மாதிரிப்படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2017.04.25 ஆந் திகதிக்கோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கும் வகையில் "பணிப்பாளர், தேசிய நூதனசாலைகள் திணைக்களம், த. பெ. இல. 854, ஸ்ரீமத் மாக்கஸ் பெர்னாந்து மாவத்தை, கொழும்பு 07" எனும் முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

* ஒழுங்குமுறைப்படி தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும், விண்ணப்ப முடிவுத் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் முன்னறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதென அறிவிக்கப்படவும் மாட்டாது.

* விண்ணப்பப்படிவங்களை உறையிலிட்டு, உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பாதுகாப்பு உதவியாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு" என எழுதப்படல் வேண்டும்.

* **கையொப்பத்தை உறுதிசெய்தல்**.- வணக்கத்திற்குரிய மதத் தலைவர் அல்லது சமாதான நீதவான் அல்லது அரச பாடசாலை அதிபர் அல்லது வருடத்திற்கு 2,40,360 ரூபா சம்பளம் பெறும் அரச பதவிநிலை உத்தியோகத்தர் ஆகியவர்கள் எவரேனும் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். ஏற்கனவே அரச சேவையிலிருக்கும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்தை திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

* **வேறு**.- இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத எந்தவொரு விடயம் தொடர்பாகவும், ஆட்சேர்ப்புப் பற்றிய விடயங்கள் தொடர்பாகவும் தேசிய நூதனசாலைகள் திணைக்களப் பணிப்பாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாக அமையும்.

பணிப்பாளர் (பதிற் கடமை),
தேசிய நூதனசாலைகள் திணைக்களம்.

இல. 53, ஸ்ரீமத் மாக்கஸ் பெர்னாந்து மாவத்தை,
கொழும்பு 07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் பாதுகாப்பு உதவியாளர் பதவிக்கான விண்ணப்பம்

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

1. விண்ணப்பதாரியின் பெயர் :----.

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(i) சிங்களத்தில்/ தமிழில் :----.
(ii) ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :----.

1.2 முதலெழுத்துக்களுக்குரிய பெயர்கள் :----.
(i) சிங்களத்தில்/ தமிழில் :----.
(ii) ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :----.

2. முகவரி :
(i) சொந்த முகவரி :----.
(ii) மாவட்டம் :----.
(iii) அலுவலக முகவரி (தொழில் செய்வதாயின்) :----.

3. தொலைபேசி இலக்கம் :
சொந்த :----.
அலுவலகம் :----.

4. பிறந்த திகதி :----.
2017.04.25 ஆந் திகதிக்கு வயது :
வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

6. பால் : (ஆண்/ பெண்) :----.

7. விவாகமானவரா ?/ விவாகமாகாதவரா ? :----.

8. உயரம் .......................... மார்பளவு ...........................

9. பிரசாவுரிமை :

வம்சாவழியாக/ பதிவுமூலம் :----.

10. கல்வித் தகைமைகள் :

(i) க. பொ. த. (சா. த.)
பரீட்சை சுட்டிலக்கம் :----.
வருடம் :----.
மொழி மூலம் :----.

| சித்திபெற்ற பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. ......................... | .................. |
| 2. ......................... | .................. |
| 3. ......................... | .................. |
| 4. ......................... | .................. |
| 5. ......................... | .................. |
| 6. ......................... | .................. |
| 7. ......................... | .................. |
| 8. ......................... | .................. |

(ii) க. பொ. த. (உ. த.)
பரீட்சை சுட்டிலக்கம் :----.
வருடம் :----.
மொழி மூலம் :----.

| சித்திபெற்ற பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. ......................... | .................. |
| 2. ......................... | .................. |
| 3. ......................... | .................. |
| 4. ......................... | .................. |

11. தொழில் தகைமைகளும் விசேட திறமைகளும் :

| பாடநெறி | நிறுவனம் | பாடங்கள் | பெறுபேறு |
|---|---|---|---|
| | | | |

12. அனுபவங்கள் பற்றி விபரம் :

| பதவி | நிறுவனம் | சேவையாற்றிய காலப்பகுதி |
|---|---|---|
| | | |

**குறிப்பு**.- சகல பாடநெறிகளுக்கான சான்றிதழ்களின் பிரதிகளும் இணைக்கப்படல் வேண்டும்.

13. தற்போது சேவையிலிருப்பதாயின் அதுபற்றிய விபரங்கள் :

(1) பதவியும் தரமும் :----.
(2) நியமனத் திகதி :----.
(3) நிறுவனம் :----.
(4) ஓய்வூதியத்துடனான பதவியா இல்லையா என்பது :----.

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்குத் தெரிந்தவரையில் உண்மையானவையும், சரியானவையும் என உறுதிப்படுத்திக் கூறுகின்றேன். இத்தகவல்கள் பிழையானவை அல்லது பொய்யானவை எனப் பதவிக்குத் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து நான் தகுதியற்றவர் எனவும், பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து பதவி இரத்துச் செய்யப்படும் எனவும் நான் நன்கறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

*14.* விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ......................................... என்பவரை நான் ஏற்கனவே நன்கறிவேன் எனவும், அவர் எனது முன்னிலையில் இவ்விண்ணப்பத்தில் கையொப்பமிட்டுள்ளார் எனவும் உறுதிமொழிகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
உத்தியோகபூர்வ முத்திரை :----.
திகதி :----.

*15.* அரச சேவை அல்லது மாகாண சேவையில் தற்போது சேவையிலிருக்கும் விண்ணப்பதாரியாயின் திணைக்களத் தலைவரின் உறுதியுரை :

விண்ணப்பதாரியாகிய திரு./ திருமதி/ செல்வி .................................................... என்பவர், ...... ............................................ அமைச்சில்/ திணைக்களத்தில் நிரந்தர பதவி வகிப்பவர் எனவும், அவர் குறித்த நியமனத்திற்குத் தெரிவுசெய்யப்படுவாராயின் தற்போதைய சேவையிலிருந்து அவருக்கு விடுவிப்பு வழங்க முடியுமெனவும்/ முடியாதெனவும் இத்தால் அறிவிக்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
உத்தியோகபூர்வ முத்திரை :

திகதி :----.

*3-1271*

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**நிதி அமைச்சு**

இலங்கைச் சுங்கத் திணைக்களம்

**இலங்கை சுங்கத் திணைக்களத்தின் சுங்கக் காவலர் தரம் III பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2017**

இலங்கைச் சுங்கத் திணைக்களத்தின் சுங்கக் காவலர் தரம் III பதவிகளுக்கு பயிற்சியாளர்களை ஆட்சேர்ப்பதற்கானதொரு திறந்த போட்டிப் பரீட்சையானது, அட்டவணை I இல் காட்டப்பட்டுள்ள நகரங்களில் நிறுவப்படவிருக்கும் பரீட்சை நிலையங்களில் மாத்திரம் 2017, யூலை மாதத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படவுள்ளது. விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றுவதற்காக உத்தேசிக்கும் நகரம்/ நகரங்கள் மேற்படி பட்டியலுக்கமைய விண்ணப்பத்தின் தலைப்பில் குறிப்பிடுதல் வேண்டுமென்பதோடு, அக்குறித்த நகரம்-நகரங்களை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. ஏதாவதொரு நிலையத்தில் போதுமான அளவில் பரீட்சார்த்திகள் விண்ணப்பித்திருக்காவிடின், அக்குறித்த நிலையம் இரத்துச்செய்யப்படக் கூடுமென்பதோடு, இத்தகைய நிலைமையின் போது அவர்களின் இரண்டாவது விருப்பத்திற்கமைய விண்ணப்பித்துள்ள நகரத்திற்கோ அல்லது அண்மித்துள்ள வேறு நகரமொன்றுக்கோ சமுகமளிக்குமாறு அறிவுறுத்தப்படலாம். பரீட்சை நடத்துவதற்கு உத்தேசித்துள்ள

அனைத்து அல்லது பெரும்பாலான நகரங்களில் பரீட்சை நிலையங்களை நிறுவும் வகையில் போதியளவு பரீட்சார்த்திகள் விண்ணப்பிக்காதவிடத்து, அப்பரீட்சையினை கொழும்பு நகரில் மாத்திரம் நடாத்துவதற்கான உரிமையினை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் கொண்டுள்ளார். பரீட்சை நடைபெறும் திகதியானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பத்திரிகைகள் மூலம் உரிய காலத்தில் அறிவிக்கப்படும். இப் பரீட்சையினைப் பிற்போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கான உரிமையினை இலங்கைச் சுங்கத் திணைக்களம் கொண்டுள்ளது.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள ஆண்/ பெண் இருபாலாரிடமிருந்தும் இப்பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **தகைமைகள் :**

(i) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தாம்-

(அ) இலங்கைப் பிரசையாகவும்;
(ஆ) மிகச் சிறந்த ஒழுக்கமுடையவராகவும்;
(இ) விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் 22 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (இதற்கிணங்க 1999.04.28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பதாக பிறந்த மற்றும் 1995.04.28 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னர் பிறந்தவர்கள் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவராவர்.)

**குறிப்பு.**- ஏதேனும் சமயக் கிளையில் மதகுரு அந்தஸ்திலுள்ள எந்தவொரு நபருக்கும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

(ii) *உடற் தகைமைகள்.*- ஆண்களின் விடயத்தில் அவர்களுடைய உயரமானது 5 அடி 5 அங்குலங்களுக்கு குறையாமலும் மார்புச் சுற்றளவு (விரிவடைந்த நிலையில்) 33 அங்குலங்களுக்கு குறையாமலும் இருத்தல் வேண்டும். பெண்களின் விடயத்தில் அவர்களுடைய உயரமானது 5 அடி 3 அங்குலங்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

(iii) *கல்வித்தகைமைகள்.*- விண்ணப்பதாரிகள் பின்வரும் கல்வித் தகைமைகளை உடையவர்களாக இருத்தல் வேண்டும் :

(அ) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) சான்றிதழ் பரீட்சையில் ஒரே தடவையில் சிங்கள மொழி அல்லது தமிழ் மொழி, கணிதம் மற்றும் ஆங்கில மொழி ஆகியவற்றில் திறமைச்சித்தி அடங்கலாக ஆறு பிரதான பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

3. **சேவை நிபந்தனைகள்.**- சுங்கக் காவலர் தரம் III இற்கான ஆட்சேர்ப்புக்குரிய தகைமையினை பரீட்சிப்பதற்காக பரீட்சார்த்திகளை அழைக்கும் சந்தர்ப்பத்தில், அடுத்துவரும் ஆறு மாத காலத்திற்கு சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படுகின்ற இடம் ஒன்றிற்கு பரீட்சார்த்திகள் தனது பணி பயிலும்படியான பயிற்சியொன்றிற்கு சமுகமளிக்க வேண்டும். இப்பயிற்சிப் காலப்பகுதியினுள் சம்பளம் வழங்கப்பட மாட்டாது. அதேவேளை பயிற்சி தொடர்பில் மாதாந்த கொடுப்பனவொன்று மாத்திரம் வழங்கப்படும். பயிற்சி முடிவின்போது எரி கருவிகள் பாவனை. எதிர்த்துத் தாக்கும் முறைகள் மற்றும் தற்பாதுகாப்பு ஆகியவைகளில் பரீட்சார்த்திகள் பரீட்சிக்கப்படுவர். பயிற்சியின்போது உரிய தேவைப்பாடுகளை திருப்திகரமாகப் பூர்த்தி செய்யும் பயிலுனர்கள் சுங்கத் திணைக்களத்தின் நிரந்தரப் பதவியொன்றிற்கு உள்வாங்கப்படுவர். பயிற்சியினை பூர்த்திசெய்யத் தவறும் பயிலுநர்கள் சேவையிலிருந்து நீக்கப்படுவர்.

(i) *வேதனம்.*- இப்பதவிக்கான திரட்டிய மாதாந்த வேதன அளவுத்திட்டம் வருமாறு.-
03/ 2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் இப்பதவிக்கு உரித்தான சம்பள அளவுத்திட்டம் - பீ எல் 2 சம்பள மட்டத்தில் ரூபா 25,250-270X10-300X10-330X10-350X12-ரூபா 38,450 ஆகும். (01.01.2016 ஆந் திகதி தொடக்கம் 01.01.2020 ஆந் திகதி வரையிலான சம்பள கொடுப்பனவானது 03/ 2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கிணங்க அமையும்.)

(ii) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்துக்குரியது மாகும் என்பதுடன் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு இணங்குதலும் வேண்டும்.

(iii) சித்திபெற்று தெரிவாகும் பரீட்சார்த்திகள் நியமனத் திகதியிலிருந்து மூன்று ஆண்டுகாலப்பகுதிக்கு தகுதிகூர் நிலையில் வைக்கப்பட்டு நியமனம் வழங்கப்படும்.

(iv) நியமனத்தர்கள் நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றக் கூடிய உடல் நிலை தகுதியினை உடையவர்கள் என்பதை பரீட்சிப்பதற்காக அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரினால் நடாத்தப்படும் மருத்துவப் பரீட்சைக்கு உட்படுதல் வேண்டும்.

(v) நியமனத்தர்கள் இத்தீவின் எப்பாகத்திலும் இரவிலும் பகலிலும் சேவையாற்றுவதற்கு பணிக்கப் பட்டுள்ளார்கள்.

(vi) அரசாங்க வர்த்தமானி பகுதி I : தொகுதி (IIஅ) வின் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவைப்பதவிகளுக்கு ஏற்புடையதான பொது நிபந்தனைகளுக்கு கவனம் கோரப்படுகின்றது.

*4.* **பரீட்சைத் திட்டம்**.- ஆட்சேர்ப்புக்கான பரீட்சையானது பின்வரும் இரண்டு (2) வினாப்பத்திரங்களைக் கொண்டிருக்கும் :-

| | | *புள்ளிகள்* |
|---|---|---|
| (i) | *உளச்சார்புப் பரீட்சை (1 மணித்தியாலம்)* | *100* |
| (ii) | *கணிதம் (1 1/ 2 மணித்தியாலங்கள்)* | *100* |
| | மொத்தம் | *200* |

*உளச்சார்புப் பரீட்சை வினாத்தாள்*.- இவ்வினாத்தாளானது பரீட்சார்த்தியினது மொழித் தேர்ச்சி, தர்க்க ரீதியான அறிவினை அளவிடும் வகையிலான வினாக்களைக் கொண்டிருக்கும். இவ்வினாப்பத்திரமானது பல்தேர்வு வினாக்களையும் குறுகிய விடைகளுக்கான வினாக்களையும் உள்ளடக்கும். சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

*கணித வினாத்தாள்*.- இவ்வினாத்தாளானது பரீட்சார்த்தியின் கணித அறிவினைப் பரிசோதிப்பதற்கான கேள்விகளைக் கொண்டிருக்கும். சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**குறிப்பு**.- இப்பரீட்சையானது சிங்களம், ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். இந்த அறிவித்தலின் பந்தி 2 (iii) இல் குறிப்பிடப்பட்ட தகைமைப் பரீட்சையில் சித்திபெற்ற மொழியிலேயே விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்ற வேண்டும். (அதாவது- சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம்) ஆயினும் தகைமை பரீட்சையை ஆங்கிலம் அல்லது தமிழ் மொழியில் சித்திபெறும் ஒரு விண்ணப்பதாரி அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழியில் கல்விகற்ற ஒரு விண்ணப்பதாரி தாம் விரும்பினால் இப்பரீட்சைக்கு சிங்கள மொழியில் தோற்றலாம். பரீட்சார்த்தி விண்ணப்பத்திற் கொடுத்த பரீட்சை மொழியை மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டார்.

(i) தெளிவற்ற எழுத்துக்கும் எழுத்துப் பிழைகளுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும். தெளிவற்ற எழுத்தில் விடையெழுதும் விண்ணப்பதாரி தகைமை நீக்கம் செய்யப்படக் கூடும்.

(ii) வர்த்தமான பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ள தகைமையினைக் கொண்டவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் எனக் கருதி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டைகளானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பிவைக்கப்படும். ஆனால் பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவது பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சகல தகைமைகளையும் பெற்றுள்ளார் என கருதுதல் ஆகாது. பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்படிதல் வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாகுதல் வேண்டும்.

(iii) *மதிப்பிடுகை*.- ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் 50% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் தற்போதுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு இணங்க மொத்தத்தின் இறங்குவரிசையில் முதற்கட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். முதற்கட்ட நேர்முகப் பரீட்சையில் விளையாட்டு திறமைகளுக்காக ஆகக்கூடியது 10 புள்ளிகள் வழங்கப்படும். அதன் பின்னர் பொது நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். இதன்போது எவ்வித புள்ளிகளும் வழங்கப்படமாட்டாது. இப்பதவிக்குத் தேவையான தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்திருத்தல் மாத்திரம் பரிசோதிக்கப்படும்.

*முதற்கட்ட நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் நடைமுறை :*

*வலய மட்டத்தில் தனிப்பட்ட விளையாட்டுக்கான புள்ளிகள்*.- முதலாமிடத்திற்கு 3 புள்ளிகள், இரண்டாமிடத்திற்கு 2 புள்ளிகள் மற்றும் மூன்றாமிடத்திற்கு 1 புள்ளி.

*மாவட்ட மட்டத்தில் தனிப்பட்ட விளையாட்டுக்கான புள்ளிகள்*.- முதலாமிடத்திற்கு 4 புள்ளிகள், இரண்டாமிடத்திற்கு 3 புள்ளிகள் மற்றும் மூன்றாமிடத்திற்கு 2 புள்ளிகள்.

*தேசிய மட்டத்தில் தனிப்பட்ட விளையாட்டுக்கான புள்ளிகள்*.- முதலாமிடத்திற்கு 5 புள்ளிகள், இரண்டாமிடத்திற்கு 4 புள்ளிகள் மற்றும் மூன்றாமிடத்திற்கு 3 புள்ளிகள்.

5. **தெரிவுமுறை அடிப்படை அல்லது தேர்ந்தெடுக்கும் முறை**.- எழுத்துப் பரீட்சையிலும் நேர்முகப் பரீட்சையிலும் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களுக்கு பணி பயில்பவராக நியமனம் அளிப்பதற்கு தெரிவுசெய்யப்படுவர். அங்கீகரிக்கப் பட்ட வெற்றிட எண்ணிக்கையில் 10% பெண் பரீட்சார்த்திகளுக்கு ஒதுக்கிவைக்கப்படும்.

**குறிப்பு**.- சுங்கத் திணைக்களத்தினது வேலைகளுக்கேற்ப பெண் அலுவலர்களும் இரவு வேளையில் கடமைபுரிய வேண்டியிருக்கும்.

(i) *பெறுபேறு வெளியிடல்*.- எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்து நேர்முகப் பரீட்சைக்குத் தகுதிபெற்ற விண்ணப்பதாரியின் எழுத்துப் பரீட்சைப் புள்ளி மற்றும் நேர்முகப் பரீட்சையின் புள்ளி ஆகியவற்றின் மொத்தப் புள்ளிகளுக்கிணங்க இறங்குவரிசையில் தயாரிக்கப்பட்ட பட்டியலானது சுங்கத் திணைக்களத்தின் சுங்கப் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளதும் பெறுபேறு தபாலிலோ அல்லது www.results.exams.gov.lk எனும் அலுவலக வெப் தளத்தினூடாகவோ இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும்.

(ii) பரீட்சையினை நடாத்துதல் மற்றும் பெறுபேற்றினை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர்

நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்படிதல் வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாகுதல் வேண்டும்.

6. விண்ணப்பதாரர் (ஆண்/ பெண்) ஒவ்வொருவரும் பரீட்சைக்குரிய விண்ணப்பத் திகதி முடிவுறுவதற்கு முன்னர் சகல தேவைப்பாடுகளையும் பூர்த்திசெய்திருக்க வேண்டுமென்பது கட்டாயமானதாகும்.

7. **விண்ணப்பிக்கும் முறை :**

(i) இந்த அறிவித்தலின் இறுதியில் மாதிரி விண்ணப்பப்படிவம் ஒன்று பிரசுரிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் தாம் பரீட்சை எழுதுவதற்கு உத்தேசித்துள்ள மொழிமூலத்தில் தாமாகவே விண்ணப்பங்களை இங்கு தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க தயாரித்து சொந்த கையெழுத்தில் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பத்தினது ஒவ்வொரு கூட்டிலும் அறிவுறுத்தலுக்கிணங்க விண்ணப்பதாரர்களால் நிரப்பப்பட வேண்டியதுடன் ஏதாவது கூட்டினுள் பொருத்தமற்றவை இருப்பின், அத்தகைய கூட்டினுள் ''பொருத்தமற்றவை'' என்ற பதம் எழுதப்படல் வேண்டும். கண்டிப்பாக கவனிக்கப்படவேண்டியது யாதெனில், விண்ணப்பத்தில் கூடுகள் நிரப்பப்படாது விடுதலானது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதற்கான காரணமாக இருக்கும். (விண்ணப்பங்களானது ஏ4 அளவிலான தாளில் தயாரித்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பத்தில் 1 தொடக்கம் 5 வரையரான தலைப்பு இலக்கங்கள் முதல் பக்கத்திலும் 6 தொடக்கம் 11 வரையிலானவை இரண்டாவது பக்கததிலும் மீதியானவை மூன்றாவது பக்கத்திலும் வரும் விதம் தயாரித்தல் வேண்டும்.). சிங்கள மற்றும் தமிழ் மொழிமூல விண்ணப்பங்களில் பரீட்சையின் தலைப்பானது ஆங்கிலத்திலும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பங்கள் 28.04.2017 திகதியன்றோ அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு கிடைக்கத்தக்கவாறு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் பெறப்படும் எந்தவொரு விண்ணப்பப்படிவங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப்படிவம் வைத்து அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை,
இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்,
த.பெ.இல 1503,
கொழும்பு.

(iii) அரசாங்க திணைக்களங்களில் அல்லது சபைகளில் அல்லது கூட்டுத்தாபனங்களில் சேவையாற்றும் விண்ணபதாரிகள், தற்போது தாங்கள் சேவையாற்றும் திணைக்களங்கள் அல்லது நிறுவனங்களின் தலைவர்களினூடாக தங்களது விண்ணப்பங்களை அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை 2017.04.28 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினை சென்றடைய வேண்டுமென்ற வேண்டுகோளுடன் தங்கள் விண்ணப்பங்களை தங்கள் திணைக்கள அல்லது நிறுவனங்களின் தலைவர்களுக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் தனிப்பட்ட முறையில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கோ அல்லது திணைக்களத்தைச் சேர்ந்த வேறு எவரேனும் உத்தியோகத்தருக்கோ அனுப்பப்படலாகாது. இத்திகதிக்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவை அத்திணைக்களங்களுக்கூடாக அனுப்பப்பட்டாலும் கூட அவைகள் நிராகரிக்கப்படும். அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களது விண்ணப்பத்தில் திணைக்களத் தலைவர்/ நிறுவனத் தலைவர் விண்ணப்பதாரரது கையொப்பத்தினை உறுதிப்படுத்தி அவரது கையொப்பம், அலுவலக முத்திரை என்பன இடப்படாதவிடத்து அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(iv) *பரீட்சைக் கட்டணம்.-* பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் 2003-02-13 ஆம் இலக்க வருமான தலைப்பின் கீழ் அரச வருவாய்க்கு வரவு வைக்கும் வகையில் நாட்டின் எப்பகுதியிலும் அமைந்துள்ள ஏதாவதொரு தபால் அலுவலகம்/ உப தபால் அலுவலகத்தில் பரீட்சைக்கட்டணமாக ரூபா 500 செலுத்தி பரீட்சார்த்தியின் பெயருக்கு பெறப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கழராதபடி ஒட்டப்படல் வேண்டும். பரீட்சைக்கட்டணம் தொடர்பில் காசுக்கட்டளை மற்றும் முத்திரை என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சை தொடர்பாக செலுத்திய கட்டணம் எச்சந்தர்ப்பத்திலும் மீள செலுத்தப்படவோ மற்றும் வேறொரு பரீட்சைக்காக மாற்றப்படவோ இயலாது. விண்ணப்பதாரர்கள் பரீட்சைக்கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றினை தம்மிடம் வைத்துக்கொள்ளவது பயனுள்ளதாக அமையும்.

(v) *கையொப்பத்தினை உறுதிப்படுத்துதல்.-* அரசாங்க சேவையிலுள்ள ஒரு விண்ணப்பதாரியின் கையொப்பமானது அவரது திணைக்களத் தலைவரினால் அல்லது அவரது சார்பில் அதிகாரப்படுத்தப்பட்ட அலுவலர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். ஏனைய விண்ணப்பதாரரின் கையொப்பங்கள் அதிகாரமளிக்கப்பட்ட ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அதாவது சமாதான

நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், வழக்கறிஞர், பிரசித்த நொத்தாரிசு, அரசாங்க பாடசாலை அதிபர் அல்லது பணிப்பாளர் நிர்வகிக்கப்படும் பாடசாலை, கடற்படை, வான்படை அல்லது தரைப்படை அதிகாரமுடைய அதிகாரி, ரூபா 2,40,360 அல்லது அதற்குமேல் வருடாந்த சம்பளமுள்ள நிரந்தர அரசாங்க அலுவலர், பௌத்த ஆலயமொன்றின் பிரதம குரு அல்லது உயர்மத குரு அல்லது ஏதாவது வழிபாட்டுத்தலமொன்றுக்கு பொறுப்பாகவுள்ளவர் அல்லது முக்கிய பதவி வகிக்கப்படுவர்.

8. **பரீட்சை அனுமதியளித்தல்**.- வர்த்தமானப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ள தகைமையினைக் கொண்டுள்ளவர்கள் விண்ணப்பித்துள்ளார்கள் எனக் கருதி குறித்த பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி குறித்த தினத்திலோ அல்லது அத்திகதிக்கு முன்போ விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை அனுப்புவார். பரீட்சைகளுக்கென தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் கையொப்பத்தினை அத்தாட்சிப்படுத்தப்பட்ட தமது அனுமதி அட்டைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

பரீட்சார்த்திக்கென ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். தமக்கென ஒதுக்கப்படாத பரீட்சை மண்டபத்துக்குச் செல்லும் பரீட்சார்த்திகளுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும், பரீட்சை ஆரம்பமாகும் நாளன்று பரீட்சை மேற்பார்வையாளரிடம் தமது அனுமதி அட்டையினை கையளித்தல் வேண்டும். பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் ஒழுங்குவிதிகளும் இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) இன் ஆரம்பத்தில் தரப்பட்டுள்ளன. இந்த விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுவர்.

பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை வழங்கியவுடன் அது தொடர்பாக பரீட்சைத் திணைக்களம், பத்திரிகை அறிவிப்பொன்றினை வெளியிடும். அவ்வறிவித்தல் வெளியாகி இரண்டு அல்லது மூன்று நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளையிடம் வினவலாம். விண்ணப்பதாரரின் முழுப்பெயர், விலாசம், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர் என்பனவற்றினையும் கொழும்பின் வெளிப்பிரதேசமாயின் அனுமதி அட்டை அனுப்புவதற்கான பெக்ஸ் இலக்கம் அடங்கிய குறிப்பிட்ட உங்களது கோரிக்கைக் கடிதத்தை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் பயனுள்ளதாகும்.

9. **பரீட்சார்த்தியின் அடையாளம்**.- பரீட்சார்த்திகள் அவர்களது அடையாளத்தினை நிரூபித்தல் வேண்டும். இந்நோக்கத்திற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனுமொன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ஆ) பரீட்சைத் திகதிக்கு முன்பதாக ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாது வழங்கப்பட்ட செல்லுபடியான கடவுச்சீட்டு.

மேற்கூறப்பட்டவாறான ஆவணமொன்றினை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தியின் பரீட்சார்த்தத் தன்மை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின் பெயரில் நிராகரிக்கப்படலாம்.

10. **தகைமை ஆவணங்கள்**.- (i) விண்ணப்பத்துடன், பரீட்சைக் கட்டணமாக செலுத்தப்பட்ட காசுக்கட்டளை தவிர்ந்த பிற ஆவணங்கள் எதுவும் விண்ணப்பத்துடன் அனுப்பப்படலாகாது. ஆனால் விதித்துரைக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் தேவையான விபரங்கள் விண்ணப்பத்தில் தரப்பட்டிருத்தல் வேண்டும். இந்த முறையில் சகல அம்சங்களிலும் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பமானது அதன் தகுதிகளின் பெயரில் தீர்மானிக்கப்பட்டு நிராகரிக்கப்படலாம்.

(ii) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் தகுதிபெற்ற பரீட்சார்த்திகள் தமது தகைமைகளை நிரூபிப்பதற்கான ஆவணச்சான்றிதழ்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

(iii) பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகள் தேவைப் படும் :

(அ) பொறுப்புள்ள ஆளொருவரினால் ஒப்பமிடப்பட்ட குணநலச் சான்றிதழ்.

**குறிப்பு**.- இத்தகைய குணநலச் சான்றிதழானது சமாதான நீதவான், வழக்கறிஞர், வதிவிட பிரதேச செயலாளர் அல்லது ஆண்டொற்றிற்கு ரூபா 2,40,360 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை திரட்டிய சம்பளமாகப் பெறும் நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர் அல்லது பொதுவாக நன்கு தெரிந்தவர்கள் இலகுவாக சிபாரிசு பெற்றுக் கொள்ளக்கூடியதுமான ஒருவரால் பெறப்படலாம். இத்தகைய உறுதிப்படுத்துபவரது பெயர், பதவி, முகவரி என்பன சான்றுப்படுத்தலில் தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.

அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் பரீட்சார்த்திகளின் விடயத்தில் அவர்கள் குணநலச் சான்றிதழ்களை சமர்ப்பிக்கும்படி கேட்கப்படமாட்டார்கள்.

(ஆ) பரீட்சார்த்தியின் பிறப்புப் பதிவினது சான்றுப் படுத்தப்பட்ட ஒரு பிரதி அல்லது பதிவாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட வயது பற்றிய ஒரு விசேட சான்றிதழ் (பிறப்பு பதிவுசெய்யப்படாத பரீட்சார்த்திகளது விடயத்தில்)

**குறிப்பு**.- (I) பாடசாலை அல்லது கல்வித் தேவைகளுக்கென வழங்கப்பட்ட விசேட பிறப்புச் சான்றிதழ் அல்லது பிறப்புப் பதிவிலிருந்து எடுக்கப்பட்ட சான்றுபடுத்தப்பட்டதொரு பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(II) பிறப்புச் சான்றிதழ்களுக்குப் பதிலாக நம்பிக்கை உறுதிப் பத்திரங்களோ அல்லது ஞானஸ்நான சான்றிதழ்களோ ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

பரீட்சார்த்தி சாதாரணமாக பயன்படுத்தும் பெயர் அல்லது பெயர்களிலிருந்து பிறப்புச் சான்றிதழில் உள்ள பெயர் அல்லது பெயர்கள் வேறுபடின் அல்லது பரீட்சைக்கு விண்ணப்பதாரி தோற்றும் பெயர் வேறுபடின் பிறப்புகள், இறப்புகள் பதிவுச் சட்டத்தின் (அத்தியாயம் 110) 27 ஆம், 28 ஆம் பிரிவுகளின் நியதிகளுக்கு அமைய பிறப்புப் பதிவிலுள்ள பெயரை திருத்துவதற்கான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படல் வேண்டும்.

(III) இலங்கைப் பிரசை என்ற பதிவுச்சான்றிதழ் அல்லது வம்சாவளிப் பிரசாவுரிமைக்கான கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்ட மூல உத்தியோகபூர்வ கடிதம் (ஏற்புடையதாயின்)

(IV) கல்வித் தகைமை மூலச்சான்றிதழ்கள் அல்லது அத்தகைய சான்றிதழ்கள் வழங்கப்படாதவிடத்து ஏனைய உத்தியோகபூர்வ ஆவணங்கள்

(V) வலய/ மாவட்ட/ தேசிய விளையாட்டு போட்டிகளில் பெற்றுக் கொண்ட நிரூபண ஆவணம்

(VI) விண்ணப்பத்தினை அனுப்புகின்ற சமயத்தில் சகல தேவையான ஆவணங்களையும் தயாராக வைத்திருக்கும்படி பரீட்சார்த்திகள் கேட்கப்படுகின்றனர். தேவையான ஆவணங் களை சமர்ப்பிப்பதற்கு தவறுகின்ற அல்லது தேவையான சந்தர்ப்பத்தில் அவற்றைச் சமர்ப்பிப்பதில் தாமதங்களை ஏற்படுத்துகின்ற பரீட்சார்த்திகள் இப்பதவிக்கான பணி பயில்பவர் நியமனத்திற்கு தகுதியற்றவர்களாவர்.

11. **தவறான தகவல்களை சமர்ப்பிப்பதற்கான தண்டனை.**- இப்பரீட்சைக்கான ஒழுங்குவிதிகளின்படி எவரேனும் பரீட்சார்த்தி ஒருவர் அதற்குத் தோற்றுவதற்கு தகைமை அற்றவர் எனத் தெரியவருமாயின் பரீட்சையின் முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவருடைய பரீட்சார்த்தி உரிமை இரத்துச்செய்யப்படலாம். பரீட்சைக்கு விண்ணப்பதாரி ஒருவரினால் தரப்பட்டுள்ள விண்ணப் பங்கள் ஏதேனும் அவரது அறிவுக்கு எட்டியவரையில் தவறானவை என அல்லது வேண்டுமென்றே விபரங்களைத் தரவில்லையென காணப்படின் அல்லது அவரது சேவைக் காலத்தின் எக்காலப்பகுதியிலேனும் அவர் பரீட்சைக்குத் தோற்றும் தகைமையற்றவர் என நிரூபிக்கப்படின் அவர் சேவையிலிருந்து உடனடியாக நீக்கப்படுவார். இந்த அறிவித்தலில் தரப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணக்கமாக இல்லாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

12. இந்த ஒழுங்குவிதிகளில் கவனிக்கப்படாத ஏதேனும் விடயம் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி கையாளப்படும்.

13. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலம் வெளியிடப்படுகின்ற இந்த அறிவித்தலில் யாதேனும் வித்தியாசம் காணப்படின் சிங்கள மொழியில் வெளியிடப்படும் அறிவித்தலே வலுப்பெறும்.

**அட்டவணை I**

| மாகாணம் | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| மேல் | கொழும்பு | 01 |
| | கம்பஹா | 02 |
| | களுத்துறை | 03 |
| மத்திய | கண்டி | 04 |
| | மாத்தளை | 05 |
| | நுவரெலியா | 06 |
| தென் | காலி | 07 |
| | மாத்தறை | 08 |
| | அம்பாந்தோட்டை | 09 |
| வடக்கு | யாழ்ப்பாணம் | 10 |
| | மன்னார் | 11 |
| | வவுனியா | 12 |
| | முல்லைத்தீவு | 13 |
| | கிளிநொச்சி | 14 |
| கிழக்கு | மட்டக்களப்பு | 15 |
| | அம்பாறை | 16 |
| | திருகோணமலை | 17 |
| வடமேல் | குருநாகல் | 18 |
| | சிலாபம் | 19 |
| வடமத்திய | அநுராதபுரம் | 20 |
| | பொலநறுவை | 21 |
| ஊவா | பதுளை | 22 |
| | மொனராகலை | 23 |
| சப்பிரகமுவ | இரத்தினபுரி | 24 |
| | கேகாலை | 25 |

சுங்கப் பணிப்பாளர் நாயகம்.

இலங்கைச் சுங்கத் திணைக்களம்,
“சுங்க இல்லம்”,
இல. 40, பிரதான வீதி,
கொழும்பு 11.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை சுங்கத் திணைக்களத்தின் சுங்க காவலர் தரம் III ஆம் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017**

OPEN COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT TO POSTS OF CUSTOMS GUARD, GRADE - III

DEPARTMENT OF SRI LANKA CUSTOMS - 2017

[ ]

(அலுவலக பாவனைக்கு மாத்திரம்)

நீர் இப்பரீட்சையில் தோற்றுவதற்கான மொழிமூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 [ ]
(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

பரீட்சைக்குத் தோற்றவுள்ள நகரமும்
நகர இலக்கமும் (அட்டவணை 1 ஐப் பார்க்க)

| நகர தெரிவு | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| முதலாவது தெரிவு | | |
| இரண்டாவது தெரிவு | | |

1. விண்ணப்பதாரரின் பெயர் :----.

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்)உதாரணம்:-GUNAWARDHANA, M. G. B. S. K. :----.

1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழ்/ சிங்களம்) : ----.

1.3 முதலெழுத்துக்களால் குறிக்கும் பெயர்கள் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

சிங்களம்/தமிழில் :----.

2. நிரந்தர வதிவிட விலாசம் (ஆங்கில பெரிய எழுத்துக் களில்) :----.

அனுமதி அட்டை அனுப்புவதற்கான விலாசம் :----.

3. தேசிய அடையாள அட்டையினது விபரங்கள் :

3.1 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

3.2 வழங்கப்பட்ட திகதி : [ ]

4. பால் :
ஆண்-0
பெண்-1 [ ]
(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

5. நீங்கள் இலங்கைப் பிரஜையா இல்லையா என்பதைக் குறிப்பிடவும் :----.

வம்சாவழி மூலம்-1
பதிவு மூலம்-2 [ ]
(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

6. தேசிய இனம் :
சிங்களவர் - 1
இலங்கைத் தமிழர் - 2
இந்தியத் தமிழர் - 3
முஸ்லிம் - 4
பறங்கியர் - 5
ஏனையோர் - 6 [ ]
(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

7. (அ) பிறந்த திகதி :

வருடம் [ ][ ][ ][ ] மாதம் [ ][ ] திகதி [ ][ ]

(ஆ) விண்ணப்பம் முடிவுத் திகதியன்று வயது :

வருடங்கள் [ ][ ] மாதங்கள் [ ][ ] நாட்கள் [ ][ ]

8. உடற்தகைமைத் தேவைப்பாடுகள் :

(i) உயரம் : .......... அடி .......... அங்குலம்

(ii) மார்புச் சுற்றளவு (விரிவடைந்த நிலையில்) : ............ அங்குலம்
(ஆண் விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம்)

9. நீர் ஏதாவது குற்றச்செயலுக்காக எப்பொழுதாவது நீதிமன்ற தண்டனை அனுபவித்துள்ளீரா ? (ஆம்/ இல்லை) :----.

ஆம் எனில், விபரங்களைக் குறிப்பிடவும் :----. [ ]

10. கல்வித் தகைமைகள் :

(i) ஒரே அமர்வில் பெறப்பட்ட கல்விப் பொதுத்தராதர (சாதாரண தர) சான்றிதழ் பெறுபேறு :
பரீட்சையினது வருடம் :----.
சுட்டெண் :----.

| பாட இல. | பாடம் | பெறுபேறு |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

11. பரீட்சைக் கட்டணம் (பற்றுச்சீட்டு இணைக்கப்படல் வேண்டும்) :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால்/ உப தபால் அலுவலகம் :
(ii) செலுத்திய தொகை :----.
(iii) செலுத்திய திகதி :----.
(iv) பற்றுச்சீட்டு இலக்கம் :----.

| பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும். (பற்றுச்சீட்டின் பிரதியொன்றினை தம்வசம் வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.) |
|---|

இந்த விபரங்கள் கட்டாயமாக கொடுக்கப்படல் வேண்டும்.

12. **விண்ணப்பதாரியின் உறுதியுரை/சான்றுப்படுத்தல்.**-

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் இத்தால் உறுதிமொழிகிறேன். இவற்றில் அடங்கியுள்ள விபரங்களில் ஏதேனும் பொய்யானவை அல்லது தவறானவை எனக் காணப்படின் தெரிவுக்கு முன்னராயின் தகைமை நீக்கம் செய்யப்படுவதற்கும் அல்லது தெரிவின் பின்னராயின் பதவி நீக்கம் செய்யப்படுவதற்கும் ஆளாவேன். மேலும் பரீட்சை நடத்துதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினது சட்டவிதிகளுக்கமைய நான் நடந்துகொள்வேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

13. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப் படுத்தல் (பொருத்தமற்றதை வெட்டிவிடவும்.)** :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ................................ என்பவரை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியும் என்றும் அவரது கையொப்பம் எனது முன்னிலையில் ........... ஆந் திகதி இடப்பட்டது என்பதையும் அவர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டானது இணைக்கப்பட்டுள்ளது எனவும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துவரது கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரது முழுப்பெயர் :----.
பதவி :----.
விலாசம் :----.
திகதி :----.

(அலுவலக முத்திரையிடவும்.)

**குறிப்பு**.- வர்த்தமானி அறிவித்தலில் 7 (V) ஆம் பந்தியில் குறிப்பிட்டதொரு நபரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

14. இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ................................ என்பவர் இவ் அமைச்சில்/ திணைக்களத்தில்/ சபையில்/ கூட்டுத்தாபனத்தில் கடமை புரிபவர் என்றும் அவர் மேலே குறிப்பிட்ட பதவிக்குத் தெரிவுசெய்யப்படின் அவரை விடுவிக்க முடியும்.

----,
திணைக்களத் தலைவரினது கையொப்பம்.
(அலுவலக முத்திரை) :

திணைக்களத் தலைவரது பெயர் :----.
பதவி :----.
திணைக்களத்தின் விலாசம் :----.
திகதி :----.

3-1274

---

## காணி அமைச்சு

இலங்கை நிலஅளவைத் திணைக்களம்

### நிலஅளவையாளர் நாயகத்தின் உத்தரவுபெற்ற பட வரைஞர் சான்றிதழ் வழங்குவதற்காக நடாத்தப்படும் பரீட்சை – 2017

நிலஅளவையாளர் நாயகத்தால், உத்தரவுபெற்ற படவரைஞராக தொழில் புரிவதற்கான சான்றிதழ் வழங்குவதற்கான பரீட்சை கொழும்பில் நடைபெறும். இப்பரீட்சை இரண்டு பகுதிகளாக நடாத்தப்படும்.-

பகுதி I – ஆள் கூற்றுப்பத்திரம் தயாரித்தல்
பகுதி II – பட வேலை

2. பகுதி I - பரீட்சை 2017 ஆம் ஆண்டு ஆடி மாதம் 22 ஆந் திகதியும், பகுதி II - பரீட்சை 2017 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 21 மற்றும் 22 ஆந் திகதிகளிலும் நடைபெறும். பகுதி I பரீட்சையில் சித்தியடையாத பரீட்சார்த்திகள் பகுதி II பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள். நிலஅளவையாளர் நாயகத்தின் உத்தரவுபெற்ற படவரைஞராக தொழில் புரிவதற்கான சான்றிதழ் பெறுவதற்கான தகுதியைப் பெறுவதற்கு பரீட்சார்த்திகள் ஒரே தடவையில் பகுதி I மற்றும் பகுதி II ஆகிய இரு பரீட்சைகளிலும் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

3. பரீட்சார்த்திகள் பின்வருவனவற்றைச் செய்ய முடியுமென்பதில் என்னைத் திருப்திப்படுத்த வேண்டும் :-

(அ) புலக் குறிப்பிலிருந்து ஆள் கூற்றுத் தாள் ஒன்றைச் சரியாக தயார்செய்து அளவைப் போகு ஒன்றின் ஆள் கூறுகளைக் கணித்தல் ;

(ஆ) புலக் குறிப்பிலிருந்து சரியான கிடைப்படம் ஒன்றை ஆள் கூறுகளையும், புறக்டாக்ரரையும் (protractor) பாவித்துக் கீறி சரியாகப் பரப்பைக் கணிக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

4. பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகள் :

(அ) தேசிய கல்விச் சான்றிதழ் (N. C. E.) அல்லது க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு (02) திறமைச்சித்தி (Credit Pass) உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தி ;

மற்றும்

(ஆ) ஒரு வருடத்திற்கு குறையாத படவரைஞர் பாடநெறியுடன் தொடர்புடைய பாடநெறியை அரச தொழில்நுட்பக் கல்லூரியில் அல்லது வேறு பகுதி அரச நிறுவனங்களில் (Semi Government Institution) வெற்றிகரமாகப் பூரணப்படுத்தியிருத்தல்.

5. பரீட்சைக் கட்டணம்.- பரீட்சைக் கட்டணம் 800 ரூபா ஆகும். பரீட்சைக் கட்டணத்தை நில அளவையாளர் நாயகத்தின் சிறாப்பர் அலுவலகத்திலோ, எந்த ஒரு மாவட்ட நில அளவை அலுவலகத்திலோ அல்லது அளவையியல் படமாக்கல் நிறுவனம் தியத்தலாவையிலோ செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் ஒட்ட வேண்டும். (பற்றுச்சீட்டின் ஒரு புகைப்படப் பிரதியை எதிர்கால தேவைக்காக வைத்திருக்கவும்.) மேலும் காசுக்கட்டளைகளோ, காசோலைகளோ இதன் பொருட்டு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பற்றுச்சீட்டு இன்றி அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். பரீட்சைக் கட்டணம் முத்திரைகளாகவோ அல்லது காசோலைகளாகவோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

6. விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்தலும் சமர்ப்பித்தலும்.- இந்த விளம்பத்தின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய 21 செ. மீ. x 29 செ. மீ. (A4) அளவிலான தாளில் இரு பக்கங்களையும் பாவித்துத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பதிவுத்தபால் மூலம் கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "நில அளவையாளர் நாயகத்தின் உத்தரவுபெற்ற படவரைஞர் சான்றிதழ் வழங்குவதற்காக நடாத்தப்படும் பரீட்சை - 2017" என்று குறிப்பிடவும்.

சிரேஷ்ட நிலஅளவை அத்தியட்சகர் (பரீட்சை),
பரீட்சைகள் கிளை,
நில அளவையாளர் நாயக அலுவலகம்,
தபால் பெட்டி இலக்கம் 506,
கொழும்பு.

தரப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்களும், சரியான முறையில் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்களும், விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும்.

7. எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது.

8. 2017 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 19 ஆந் திகதிக்குப் பின்னர் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

9. வரைபுத்தாள்களும் ஆள் கூற்றுத்தாள்களும் பரீட்சை மண்டபத்தில் வழங்கப்படும். இருந்தும் வரைதல் உபகரணங்கள், ஆள் கூறுக்களைக் கணிக்க உதவும் கணித வாய்ப்பாடுகள் மற்றும் விண்ணப்பதாரிகளுக்கு வேண்டிய உபகரணங்கள் யாவற்றையும் அவர்களே கொண்டு வருதல் வேண்டும். பரீட்சை மண்டப மேற்பார்வையாளரின் அனுமதியுடன் சாதாரண கணிப்பொறிகள் (Non Programmable Scientific Calculators) பாவிக்க அனுமதிக்கப்படும்.

10. (i) பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தில் மேற்பார்வையாளரைத் திருப்திப்படுத்துமளவுக்கு தனது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது ஒரு ஆவணத்தைச் சமர்ப்பிப்பதன் மூலம் தனது ஆள் அடையாளத்தை நிரூபிக்கலாம் :-

(அ) ஆள் பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை ;

(ஆ) ஒரு செல்லுபடியான கடவுச்சீட்டு ;

(இ) ஒரு அரசாங்கத் திணைக்களத்தின் அதிகாரத்துடன் பரீட்சார்த்திக்கு பரீட்சை தினத்திலிருந்து மூன்று வருடங்களுக்குள் வழங்கப்பட்டதும், வைத்திருப்பவரின் நிழற் படத்தைக் கொண்டதுமான ஏதாவதொரு சான்றிதழ் அல்லது உத்தரவுச்சீட்டு ;

(ii) பந்தி 10 (i) இல் வேண்டப்பட்ட அடையாளத்தை நிரூபிக்க இயலாத எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்.

11. இப்பரீட்சை மெற்றிக் முறையில் நடத்தப்படும்.

பி. எம். பி. உதயகாந்த,
நிலஅளவையாளர் நாயகம்.

நிலஅளவையாளர் நாயகத்தின் அலுவலகம்,
த. பெ. இல. 506,
கிருல வீதி,
கொழும்பு 05,
2017.03.16.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நிலஅளவைத் திணைக்களம்**

*நிலஅளவையாளர் நாயகத்தின் உத்தரவுபெற்ற படவரைஞர் சான்றிதழ் வழங்குவதற்காக நடாத்தப்படும் பரீட்சை - 2017*

சுட்டிலக்கம் : [ ]

(அலுவலகப் பாவனைக்கு)

(அ) (i) முதலெழுத்துக்களுடன் பெயர் : திரு./ திருமதி/ செல்வி :
தமிழில் :----.
ஆங்கில பெரிய எழுத்துக்களில் :----.

(ii) முதலெழுத்தைக் குறிக்கும் பெயர் :
தமிழில் :----.
ஆங்கில பெரிய எழுத்துக்களில் :----.

(ஆ) பால் :----.

(இ) பதவி :----.

(ஈ) தொழில் பார்க்குமிட முகவரி :----.

(உ) நிரந்தர முகவரி :

தமிழில் :----.

ஆங்கில பெரிய எழுத்துக்களில் :----.

(ஊ) பிறந்த திகதி :----.

(எ) கல்வித் தகைமைகள் (உறுதிப்படுத்தப்பட்ட உண்மைப் பிரதிகள் (certified true copies) இணைக்கப்பட வேண்டும்) :----.

(ஏ) பரீட்சார்த்தி இப்பரீட்சைக்கு தோற்ற உத்தேசித்திருக்கும் மொழி (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) :----.

(ஐ) காசு செலுத்திய அலுவலகம் :----.

(ஒ) பற்றுச்சீட்டு இலக்கம் :----.

திகதி :----.

(பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும்.)

மேற்கூறிய விபரங்கள் யாவும் சரியானதென்றும், உண்மையானதென்றும் உறுதிமொழிகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

3-1257

---

## தேசியசகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சு

### தேசிய ஒருமைப்பாட்டு ஒருங்கிணைப்பாளர் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை- 2017

தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் தேசிய ஒருமைப்பாட்டு ஒருங்கிணைப்பாளர் III ஆம் தரத்தில் நிலவும் பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு மூலம் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறு மற்றும் செவிமடுத்தற் திறன் பரீட்சையின் பெறுபேற்றிற்கு அமைய திறன் அடிப்படையில் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள பரீட்சார்த்திகள் தேசிய ஒருமைப்பாட்டு ஒருங்கிணைப்பாளர் III ஆம் தரப் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தெரிவு செய்யப்படுவார்கள்.

3. நியமிக்கப்படுவோர் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும். குறிப்பிட்டளவிலான வெற்றிடங்களை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் பூர்த்தி செய்யாதிருப்பதற்கான அதிகாரம் அமைச்சின் செயலாளருக்கு இருப்பதோடு, ஆட்சேர்ப்பு செய்யப்படுவோர் நாடு முழுவதுமுள்ள பிரதேச செயலகங்களுக்கு இணைப்பு செய்யப்படுவர்.

4. **மாதாந்த சம்பள அளவுத் திட்டம்**.- (பொ.நி.சுற்றறிக்கை 03/2016 பிரகாரம்)

ரூபா 27,140 - 10 x 300 - 11 x 350 - 10 x 495 - 10 x 660 - ரூபா 45,540

5. இப்பதவி நிரந்தரமானது என்பதுடன் ஓய்வூதியம் குறித்து அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானத்திற்கு நீங்கள் கட்டுப்படல் வேண்டும்.

6. **தகைமைகள்**.- தேசிய ஒருமைப்பாட்டு ஒருங்கிணைப்பாளர் III ஆம் தரப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு பின்வரும் தகைமைகள் ஏற்புடையதாகும். அனைத்து விண்ணப்பதாரிகளும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் பதவிக்குரிய சகல தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பது கட்டாயமாகும்.

6.1 *கல்வித் தகைமைகள் :*

(அ) (i) சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரு பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

(ii) கல்விப் பொதுத் தராதர (உயர் தரம்) பரீட்சையில் ஆகக் குறைந்தது ஒரு பாடத்திலேனும் (பொது அறிவுப் பரீட்சையை விடுத்து) சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

(ஆ) (i) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்) பரீட்சையில் பிரதான பாடமாக மற்றைய அரசகரும மொழியில் (சிங்களம்/தமிழ்) திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் அல்லது அதற்கு மேற்பட்ட சித்தியைப் பெற்றிருத்தல்.

அல்லது

(ii) கல்விப் பொதுத் தராதர (உயர் தரம்) பரீட்சையில் மற்றைய அரசகரும மொழியில் (சிங்களம்/தமிழ்) சாதாரண சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட சித்தியைப் பெற்றிருத்தல்.

அல்லது

(iii) அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 6 மாதத்திற்குக் (720 மணித்தியாலங்கள்) குறையாத மற்றைய அரசகரும மொழிக்கான(சிங்களம்/தமிழ்) சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல்.

**குறிப்பு**.- விண்ணப்பதாரிகள் மேற்குறித்த கல்வித் தகைமைகளுள் (அ) வின் கீழான தகைமைகள் அனைத்தையும் மற்றும் (ஆ) வின் கீழான தகைமைகளுள் ஒன்றினையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

6.2 *தொழில்சார் தகைமைகள்*.- ஏற்புடையதன்று

6.3 *அனுபவம்*.- ஏற்புடையதன்று

6.4 *உடற் தகைமைகள்*.- அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தவொரு பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவிக்கான கடமைகளை ஆற்றுவதற்குமான போதிய உடல், உளத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

6.5 *வேறு :*

(i) இலங்கைப் பிரசையாயிருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரிகள் நன்னடத்தை உடையோராக இருத்தல் வேண்டும்.

6.6 *வயதெல்லை*.- விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் தினத்தன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

7. **பரீட்சை முறை :**

7.1 எழுத்துப் பரீட்சை 02 வினாப்பத்திரங்களைக் கொண்டது. குறித்த பரீட்சைகள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படுவதோடு, விண்ணப்பிக்கும் மொழி மூலத்தைப் பின்னர் மாற்றஞ் செய்வதற்கு இடமளிக்கப்படாது.

7.2 அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ள நாடு முழுவதிலுமுள்ள நகரங்களில் பரீட்சை நடைபெறும். பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பிக்கும் நகரத்தைப் பின்னர் மாற்றஞ் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது. ஏதேனும் ஒரு நகரத்திற்கு விண்ணப்பித்தோரின் எண்ணிக்கை குறைவாக இருப்பின் அண்மையிலுள்ள நகரத்தின் பரீட்சை நிலையமொன்றில் நடைபெறும்.

(கடமைகளின் பொருட்டு விண்ணப்பதாரிகளின் தகைமைகள் மற்றும் திறனை பரிசீலிப்பதற்காக இப் பரீட்சை வினாத்தாள் தயாரிக்கப்படுகிறது)

7.3 பரீட்சையை நடாத்தல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

8. **ஆட்சேர்ப்பு நடைமுறை :**

(அ) எழுத்து மற்றும் வாய்மூலப் பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். எழுத்துப் பரீட்சையில் இரண்டாம் மொழித் திறன் வினாத்தாளுக்கு 50 புள்ளிகளுக்கும் அதிகமாகப் பெற்றுக் கொள்ளும் மற்றும் பொது உளச்சார்பு வினாத்தாளுக்கு 40 புள்ளிகளுக்கும் அதிகமாகப் பெற்றுக் கொள்ளும் அனைத்து விண்ணப்பதாரிகளையும் பேச்சு மற்றும் செவிமடுத்தல் திறன் பரீட்சைக்கு உட்படுத்தி அப் பரீட்சையில் 50 புள்ளிகளுக்கு அதிகமாகப் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பதாரிகளுள் முன்னுரிமை அடிப்படையில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போன்று இரண்டு மடங்கானோரை பொதுவானதொரு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றச் செய்து, அடிப்படைத் தகைமைகள் பரிசீலிக்கப்பட்டு, பெற்றுக் கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் ஒழுங்கில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

(ஆ) பரீட்சை குறித்த விபரம் :

| பாடம் | பாட எண் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தி பெறத் தேவையான புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1. இரண்டாம் மொழித் திறன் | 01 | 01 மணித்தியாலம் | 100 | 50 |
| 2. பொது உளச் சார்பு | 02 | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| 3. பேச்சு மற்றும் செவிமடுத்தல் | 03 | 01 மணித்தியாலம் | 100 | 50 |

(இ) பாடத் திட்டம் :

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| இரண்டாம் மொழித் திறன் | இவ்வினாத்தாளானது பரீட்சார்த்திகளின் இரண்டாம் மொழி குறித்த கருத்து வெளிப்பாடு, கிரகித்தல், எழுத்துக் கூட்டுரு மற்றும் எளிய இலக்கணப் பாவனை தொடர்பான அறிவு என்பவற்றைப் பரீட்சிக்கும் வகையிலான வினாக்களைக் கொண்டிருக்கும். |
| பொது உளச்சார்பு | இவ்வினாத்தாளானது பரீட்சார்த்திகளின் புள்ளியியல் திறன்கள், தர்க்க திறன், பொது அறிவு முதலானவற்றை மதிப்பிடும் வகையிலான வினாக்களைக் கொண்டிருக்கும். |
| பேச்சு மற்றும் செவிமடுத்தல் | இத்தேர்ச்சி பரீட்சார்த்திகளின் இரண்டாம் மொழி குறித்த பேச்சு மற்றும் செவி மடுத்தல் திறன் தொடர்பான அறிவை பரீட்சிக்கும் வகையில் அமைந்திருக்கும். |

9. **பிழையான தகவல்களுக்கான தண்டனை**.- விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்கையில் மிக அவதானத்துடன் சரியான தகவல்களைக் குறிப்பிடல் வேண்டும். இப் பரீட்சை விதிமுறைகளுக்கு அமைய எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகைமையற்றவர் என்பது வெளிப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடைபெறுகையிலோ அல்லது பரீட்சையின் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலேனும் அவரது பரீட்சார்த்தி தன்மை இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல் எந்தவொரு சந்தர்ப்பத்திலேனும் பொய்யானது எனத் தெரியவரின் அவரை அரச சேவையிலிருந்து விலக்க முடியும்.

10. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணமான 500 ரூபாவினை அரசாங்கத்தின் வருமானத் தலைப்பு 2003-99-00 இற்கு வரவாகும் வகையில் நாட்டிலுள்ள எந்தவொரு மாவட்ட அல்லது பிரதேச செயலகத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச் சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கழராதவாறு ஒட்டுதல் வேண்டும். அதன் பிரதியொன்றை உங்கள் வசம் வைத்திருத்தல் பயனுடையதாக இருக்கும். பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டானது விண்ணப்பதாரியின் பெயரிலேயே விநியோகிக்கப்பட்டிருத்தல் கட்டாயமாகும். பரீட்சைக் கட்டணமானது எக் காரணத்தைக் கொண்டும் மீண்டும் செலுத்தப்பட மாட்டாது.

11. **விண்ணப்பப்படிவங்கள்**.- A4 (24 x 29 செ.மீ) அளவிலான தாளைப் பயன்படுத்தி,

(அ) இலக்கம் 01 முதல் 2.4 வரையான பந்திகள் முதற் பக்கத்திலும்,

(ஆ) இலக்கம் 03 முதல் அடுத்து வரும் பந்திகள் ஏனைய பக்கங்களிலும் அடங்குமாறு விண்ணப்பப்படிவத்தை தயாரித்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கையில் அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை, சிங்கள மொழியிலான விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழியிலான விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடல் வேண்டும்.

உரிய தகவல்களை தனது கையெழுத்திலேயே தெளிவாக எழுதுதல் வேண்டும். உரிய முறையில் விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்யாமையினால் ஏற்படும் நட்டத்தை விண்ணப்பதாரியே ஏற்றல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை தன் வசம் வைத்திருத்தல் பயன்மிக்கதாக இருக்கும் என்பதுடன், பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பப்படிவம், பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவானதா என்பதை விண்ணப்பதாரி அவதானித்தல் வேண்டும். அவ்வாறல்லாதவிடத்து விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படலாம்.

11.1 விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பி வைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "தேசிய ஒருமைப்பாட்டு ஒருங்கிணைப்பாளர் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017" எனக் குறிப்பிடல் வேண்டும்.

11.2 விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரசித்திபெற்ற நொத்தாரிசு, முப்படையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவர், வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பொலிஸ் சேவையின் பதவியொன்றிலுள்ள உத்தியோகத்தர் ரூபா 2,40,360 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை வருடாந்த சம்பளமாகப் பெறும் உத்தியோகத்தர் ஆகியோருள் ஒருவர் சான்றுப்படுத்தியிருத்தல் வேண்டும்.

11.3 பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 2017.04.30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்

செயலாளர்,
தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு,
இல.40, புத்கமுவ வீதி,
ராஜகிரிய.

12. 12.1 விண்ணப்பதாரிகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு பின்வரும் ஆவணங்களுள் ஒன்றை பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

* ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியான தேசிய அடையாள அட்டை ;

* செல்லுபடியான கடவுச் சீட்டு.

12.2 பரீட்சை நடைபெறும் தினத்தன்று பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரியிடம் தனது கையொப்பத்தை சான்றுப்படுத்திய அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

13. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அது தொடர்பில் அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும். அனைத்துப் பரீட்சார்த்திகளும் இவ் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான பரீட்சை விதிமுறைகளுக்கு அமைய செயற்படக் கட்டுப்பட்டுள்ளனர்.

ரன்சித் உயன்கொட,
செயலாளர்,
தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு.

தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு,
இல. 40, புத்கமுவ வீதி,
ராஜகிரிய.
2017.03.01.

**அட்டவணை - 1**

**நகரங்களின் பெயர்ப் பட்டியலும் இலக்கமும்**

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| மாத்தறை | 03 |
| மட்டக்களப்பு | 04 |
| குருநாகல் | 05 |
| அநுராதபுரம் | 06 |
| பதுளை | 07 |
| இரத்தினபுரி | 08 |
| யாழ்ப்பாணம் | 09 |

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் தேசிய ஒருமைப்பாட்டு ஒருங்கிணைப்பாளர் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017**

Specimen Application Form for the Open Competitive Examination for recruitment to the Post of National Integration Co-ordinator Grade III-2017 in the Ministry of National Co-existence, Dialogue and Official Languages

மாதிரி விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள மொழியிலான விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழியிலான விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடல் வேண்டும்.

(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தைக் கூட்டில் எழுதுக)

* வர்த்தமானி அறிவித்தலின் படி விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் நகரம் மற்றும் நகர இலக்கத்தைக் குறிப்பிடுக.

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| | |

(வர்த்தமானி அறிவித்தலின் 7.2ஆம் பந்தியைப் பாருங்கள்)

1.0 1.1 முதலெழுத்துக்களை இறுதியில் எழுதி முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
உதாரணம் : PERERA, A.B.C

1.2 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்):----.

1.4 அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

1.5 பால் : பெண் - 1
ஆண் - 2 ☐

(உரிய இலக்கத்தைக் கூட்டில் எழுதுக)

2.0 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பேரெழுத்துக்களில்) :----.

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்):----.

2.3 அனுமதி அட்டையை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.4 தொலைபேசி இலக்கம் (இருப்பின்) :----.

3.0 3.1 விண்ணப்பதாரரின் நிரந்தர வதிவிட மாவட்டம் :----.

3.2 பிரதேச செயலாளர் பிரிவு :----.

3.3 வசிக்கும் கால எல்லை :----.

3.4 கிராம அலுவலர் பிரிவு :----.

4.0 பிறந்த திகதி :
வருடம் :............. மாதம் :..................... திகதி :......................

2017.04.30 ஆந் திகதியன்று வயது :
வருடங்கள் :----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

5.0 கல்வித் தகைமைகள் :

5.1 க.பொ.த. (சா.த) பரீட்சை குறித்த விபரங்கள் :

(i) பரீட்சை நடைபெற்ற வருடம் மற்றும் மாதம் :----.
(ii) சுட்டெண் :----.
(iii) பெறுபேறு :

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

5.2 க.பொ.த. (உ.த) பரீட்சை குறித்த விபரங்கள் :
(i) பரீட்சை நடைபெற்ற வருடம் மற்றும் மாதம் :----.
(ii) சுட்டெண் :----.
(iii) பெறுபேறு :

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

6.0 நீங்கள் எப்பொழுதாவது ஏதேனும் குற்றச்சாட்டிற்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா? (உரிய கூட்டில் ✓ அடையாளமிடுக)

ஆம் ☐ இல்லை ☐

(ஆம் எனில் விபரங்களைக் குறிப்பிடுக) :----.

7.0 பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டுக் குறித்த விபரம் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட அலுவலகம் :----.
(ii) பற்றுச் சீட்டு இலக்கம் மற்றும் திகதி :----.
(iii) செலுத்திய தொகை :----.

| பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திய பற்றுச் சீட்டினைக் கழராதவாறு இங்கே ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் பிரதியொன்றை உங்கள் வசம் வைத்திருங்கள்) |
|---|

8.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை:

(அ) இவ் விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் நான் அறிந்த வரையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு சில பகுதிகளை பூர்த்தி செய்யாமையினால் மற்றும்/அல்லது பிழையாகப் பூர்த்தி செய்தமையினால் ஏற்படக் கூடிய நட்டத்தை தாங்கிக் கொள்வதற்கு உடன்படுகின்றேன். மேலும், இங்கு அனைத்து பகுதிகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஆ) என்னால் வழங்கப்பட்ட இவ்வுறுதியுரை பொய்யானது என உறுதிசெய்யப்பட்டால் நியமிக்கப்படுவதற்கு முன்னர் தகைமையற்றவர் ஆவேன் என்பதையும் நியமனத்தின் பின்னர் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்குக் கட்டுப்பட்டுள்ளேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) மேலும், பரீட்சையை நடாத்துவது தொடர்பில் தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் செயலாளரினால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கும் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும் நான் கட்டுப்படுகிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஈ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தகவலையும் பின்னர் மாற்றஞ் செய்ய மாட்டேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

3-1344